விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 02 புதன்கிழமை (16.03.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 087



ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்

100 வீத சாதாரண போட்லான்

சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து


## 15 வேட்பாளர்கள் சிறையில்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் உட்பட 140 பேர் தேர்தல் வன்முறைகளில் ஈடுபட்டமையால் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட் டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் மகிந்த பால சூரிய தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தல் கடைமையில் 50 ஆயிரம் பொலிஸார் ஈடுபடவுள்ளதாகவும் 20 ஆயிரம் விசேட அதிரடிப்படையினர் (20ஆம் பக்கம் பார்க்க)

# நான்காவது அணு உலையும் வெடித்தது மீள முடியாமல் யப்பான் திணறுகிறது

(டோக்கியோ)

யப்பானின் புகுஷிமா டாய்ச்சி அணு உலையின் நான்காவது உலையில் ஏற்பட்ட பெரும் தீயைத் தொடர்ந்து அந்த அணு உலை வெடித்துச் சிதறியது.

இரண்டாம் உலகப் போரின்போது ஏற்பட்ட அழிவுகளை விட அதிகமான துயரத்தை யப்பான் தற்போது சந்தித்துள்ளது. நிலநடுக்கம் மற்றும் சுனாமி ஆழிப் பேரலை போன்ற இயற்கை அனர்த்தங்களின் தாக்குதலிலிருந்து மீளும் முன்பே அந் நாட்டின் அணு உலைகள் மூலம் அடுத்த பேராபத்து நேர்ந்துள்ளது.

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட புகுஷிமா டாய்ச்சி அணுசக்தி நிலையத்தின் மூன்று அணு உலைகள் அடுத்தடுத்து வெடித்துள்ளன.

இந்த மூன்று அணு உலைகளிலிருந்தும் வெளியேறும் ஹைட்ரஜன் யப்பானின் ஒரு பகுதியை முழுமையாக ஆக்கிரமித்துள்ளதுடன், அணு உலையின் துகள்கள் காற்றில் வேகமாகப் பரவிவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலில் அணு உலையிலிருந்து 20 கிலோ மீற்றர் தூரம் வரை (20ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் வான் தாக்குதலை முறியடிக்க அமெரிக்காவிடம் இலங்கை உதவி கோரியது

## விக்கிலீக்ஸ் இணையம் தகவல்




(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தின் போது வான் பாதுகாப்பு முறைமையை பலப்படுத்துவதற்காக அமெரிக்காவிடம் இலங்கை உதவி கோரியதாக விக்கிலீக்ஸ் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

2007ஆம் ஆண்டு மார்ச் மாதம் கட்டுநாயக்க விமான படைத்தளத்தை புலிகளின் விமானங்கள் தாக்கியதை இந்தியா வழக்கிய ராடர்கள் மூலம் தடுக்க முடியாமல் போனதையடுத்து அமெரிக்காவிடம் உதவி கோரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

2007 மார்ச் 30ஆம் திகதி அப்போதைய அமெரிக்கத் (20ஆம் பக்கம் பார்க்க)

## குற்றச்சாட்டுத் தொடர்பில் அரசாங்கம் கடும் அதிருப்தி

(கொழும்பு)

மனித உரிமை கண்காணிப்பகத்தின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அரசாங்கம் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளது. நியூயோர்க்கை மையமாகக்கொண்டு இயங்கிவரும் மனித உரிமை கண்காணிப்பகம் இலங்கை அரசாங்கம், விமானப்படை மற்றும் இராணுவம் ஆகிய தொடர்பில் அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்திவருவதாக இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர் (20ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுக்கு ஆதரவாக கருத்து கூறுவது அரசியல் சட்டத்திற்கு முரணானது அல்ல

## சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(சென்னை)

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக கருத்துச் சொல்வதும் பிரசாரம் செய்வதும் சட்டப்படி குற்றமில்லை என கருத்துரிமை இயக்கம் சார்பில் இயக்குநர் புகழேந்தி தங்கராஜ் தொடுத்த வழக்கின் மீது சென்னை உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த அக்டோபர் மாதம் விடுதலைப்புலிகள் மீதான தடையை எதிர்த்து கையெழுத்து இயக்கம் நடத்த பொலிஸார் அனுமதி மறுத்திருந்த பின்னணியில் இயக்குநர் புகழேந்தி தங்கராஜ் நீதிமன்றில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்திருந்தார்.

தடை செய்யப்பட்ட இயக்கத்துக்கு ஆதரவாக போராட்டம் நடத்த அனுமதி இல்லை என்ற பொலிஸ் ஆணையாளரின் உத்தரவை ரத்து செய்து கையெழுத்து இயக்கம் நடத்த அனுமதிக்க (20ஆம் பக்கம் பார்க்க)

## நாடுகடந்த தமிழீழ அரசால் யப்பானுக்கு அனுதாபச் செய்தி

(நியூயோர்க்)

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் வரலாறு காணாத பெரும் துயரையும் நெருக்கடியையும் சுமந்து நிற்கின்ற யப்பானிய தேசத்துக்கு தமிழ் மக்களுடைய ஆழ்ந்த கவலையையும் அக்கறையையும் நாடு கடந்த தமிழீழத்தின் பிரதமர் விசுவநாதன் உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க நியூயோர்க் நகரில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான யப்பானின் உயர் (20ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு விடுதிகளில் தங்கியிருந்த 48 யாழ்ப்பாணத்தவர்கள் கைது

## ஆஸி. செல்ல திட்டமிட்டனராம்

(கொழும்பு)

கொழும்பில் விடுதிகளில் தங்கியிருந்த யாழ்ப்பாணத் தைச் சேர்ந்த 48 தமிழர்களை மார்ச் 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

ஆண்கள், பெண்கள், சிறார்கள் உட்பட 52 பேரை கொழும்பு பிரதம நீதவான் ரஷ்மி சிங்கப்புலி முன்னிலையில் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் ஆஜர்படுத்தினர்.

கொழும்பிலும் நீர்கொழும்பிலுமுள்ள விடுதிகளிலிருந்து (20ஆம் பக்கம் பார்க்க)

# வவு., மன்னார் பாடசாலைகளுக்கே இன்றும் நாளையும் விடுமுறை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் வவுனியா, மன்னார் மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டப் பாடசாலைகள் வழமைபோல் இன்றும் நாளையும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளதாவது,

உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் நடைபெறும் மாவட்டங்களில் இன்றும் நாளையும் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இதில் வடக்கு மாகாணத்தில் வவுனியா, மன்னார் மாவட்டங்களில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெறுவதனால் இன்றும் நாளையும் குறித்த இரு மாவட்டங்களிலும் பாடசாலை (20ஆம் பக்கம் பார்க்க)


கொக்குவில் இந்துக் கல்லூரி - யாழ். இந்துக் கல்லூரி அணிகள் மோதும்

இந்துக்களின் போர்

Battle of the Hindus

18, 19ஆம் திகதிகளில்

யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நடுவு நிலை தவறாது ஒலிக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**

*Intake Get Register Now*
*Collecting the application until March 31st 2011*
*start the academic on August 2011*
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
*Administration & Documentation*
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

# சுவிஸ் தூதுவர் யாழ்.வருகை

யாழ்.குடாநாட்டிற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் தோமஸ் லிச்சர் மற்றும் அவரது அதிகாரிகள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் சுவிஸ் அபிவிருத்தி நிலையம் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.எனினும் இந்த அமைப்பு வன்னி உள்ளிட்ட யுத்த நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகள் சிலவற்றை செய்ய முன்வந்தபோதிலும் அதற்கு அனுமதி வழங்க அரச தரப்பு மறுத்து வருகின்றது.

இந்தநிலையில்பளைமற்றும்அதனை அண்டிய பகுதிகளில் சில பாடசாலைகளையும் வீடமைப்புத் திட்டங்களையும்முன்னெடுக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.இந்த வேலைத்திட்டங்களைப் பார்வையிடுவதற்காவே சுவிஸ் தூதர் சுவிஸ் அபிவிருத்தி நிலைய அதிகாரிகள் சகிதம் யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ளனர். (ந-5)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290

# மாணவ தாதியர் பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு

சுகாதார அமைச்சினால்மாணவ தாதியர் பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பின்வரும் தகைமையுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவுத் திகதி 11.04.2011. தகுதியானவர்கள் 11.03.2011ந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையின் அறிவுறுத்தலிற்கமைய விண்ணப்பிக்க முடியும்.

ஏற்கனவே 09.09.2010, 14.09.2010 ஆகிய திகதிகளில் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் நடைபெற்ற நேர்முகத் தேர்வில் கலந்துகொண்டவர்களும் கட்டாயமாக இதற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

☼ கல்வித்தகைமை க.பொ.த.சா. தரம் கணிதம், விஞ்ஞானம், தமிழ் மொழி மற்றும் ஒரு பாடம் உட்பட நான்கு பாடங்களில்திறமைச் சித்திகளுடன் இரு அமர்விற்கு மேற்படாது ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

☼ க.பொ.த.உயர்தரம் 2002 ஆம் ஆண்டுதொடக்கம் 2009 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஏதாவது பாடவிதானத்தில் ஒரே தரத்தில் மூன்று பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான செய்தி வலம்புரியில் வெளிவந்துள்ளதுடன் குறித்த வர்த்தமானியை வலம்புரி அலுவலகத்திலும் பார்வையிட முடியும். (ந)

## மறவன்புலவு சகலகலாவல்லி வித்தி

### 12 வருடங்களின் பின் திறப்பு

மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாசாலை 18மில்லியன்ரூபாய் செலவில் எஸ்.டி.சி என்ற சுவிஸ் நாட்டின் நிறுவனத்தினால் புனரமைக்கப்பட்டுள்ளது.

முன்னர் பல முறை இப்பாடசாலையை இயக்க வைக்க பொது மக்கள் கோரிக்கை விடுத்து வந்த நிலையில் அதற்கான நடவடிக்கைகளை இராணுவத்தினர் முற்றாக தடை செய்திருந்தனர்.

12 வருடங்களின் பின்னர் இப்பாடசாலையை இலங்கைக்கான சுவிஸ் நாட்டின் தூதுவர் தோமஸ் லிச்சர் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தார். (ச-5)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம்**
**இதழியல் டிப்ளோமா மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை**

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் பகுதி நேர (2008/2010) டிப்ளோமா பயிற்சிநெறியை பூர்த்தி செய்த இரண்டாவது அணி மாணவர்களிற்கான இறுதிப் பரீட்சை எதிர்வரும் ஏப்ரல் 18ஆம் திகதி ஆரம்பமாகின்றது.மாணவர்கள் 30.03.2011க்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பித்து அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
பதிவாளர்
15.03.2011
(சி-2705)

**Qatar இல் உடனடி வேலைவாய்ப்பு**

| வெற்றிடம் | எண்ணிக்கை | முன்னனுபவம் | ஊதியம் QR |
|---|---|---|---|
| 1.Light Vehicle Driver | 05 | with GCC Experience and Licence | 1200 |
| 2.Auto Mobile Mechanic & Auto Mobile Electrican | 02 | Experience in Froeign Vehicles | 1200 |
| 3.Industrial Electrican | 05 | - | 1000 |
| 4.Helpers | 20 | - | 900 |

மேற்குறிப்பிட்ட பணிகளை பூர்த்தி செய்வதற்குப் பணியாளர்கள் உடனடியாக வேண்டப்படுகின்றார்கள்.
நேர்முகப் பரீட்சை 16.03.2011 இன்று தொடக்கம் 18.03.2011 வெள்ளிக்கிழமை வரை
நேரம்: காலை 10.00am-4.30pm வரை நடைபெறும்.
தங்குமிடம், வைத்திய, போக்குவரத்து வசதிகள் மற்றும் உணவுக் கொடுப்பனவு நிறுவனத்தினால் வழங்கப்படும். மேலதிக நேரம் வேலை செய்பவர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்படும்
வேலை நேரம் 8 மணித்தியாலங்கள் வாரத்தில் 6 நாட்கள் ஏனையவவை Qatar ஊழியர் சட்டத்திற்கு அமைவாக நடைபெறும்.

**Avon International (Pvt) Ltd.**
#138, Kanakaratnam Road, (மாம்பழம் சந்திக்கு அருகாமையில் நாயன்மார்கட்டுக்கு செல்லும் வீதியில்)
Ariyalai, Jaffna, 40000,
SriLanka.
முன் பதிவுகளுக்கு:-
Tel:- +94(0)215676676, 0215679679
Hotline:- +94(0)759115111
E.Mail:- avonlk@ rocketmail.com
(சி-2699)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**விவசாயபீடம்**
**விரிவுரைகள் ஆரம்பம்**

கீழ்வரும் கல்வியாண்டு யாழ்.பல்கலைக்கழக விவசாயபீட மாணவர்களுக்கான விரிவுரைகள் யாவும் எதிர்வரும் 21.03.2011 திங்கட்கிழமை அன்று ஆரம்பமாகும் என்பதனை அறியத்தருகின்றோம்.

- முதலாம் வருடம் இரண்டாம் அரையாண்டு – 2009/2010
- இரண்டாம் வருடம் முதலாம் அரையாண்டு – 2009/2010
- மூன்றாம் வருடம் முதலாம் அரையாண்டு – 2009/2010
- நான்காம் வருடம் முதலாம் அரையாண்டு – 2009/2010

16.03.2011 (சி-2704) பதிவாளர்



**STUDY IN THE UK**
**SPOT'S ADMISSION**
**LONDON VICTORIA COLLEGE**

"A" RATED COLLEGE IN THE HEART OF LONDON CITY
Excellent facilities at the heart of London city
COLLEGE OFFICIAL Mr.Graham Minshaw WILL BE CONDUCTING INTERVIEWS AND SPOT DECISIONS on

***17th March 2011***
***at St.John's School***
***from 4.30 pm to 6.30 pm***
***Book Your Seat 0777300473***

London Victoria College
FROM POSSIBILITY TO REALITY

நிபுணத்துவம் வாய்ந்த அறிவுரைகளும், வழிகாட்டல்களும் எங்களது லண்டனில் தகைமையும், பயிற்சியும் பெற்ற அலுவலர்களால் வழங்கப்படுவதுடன் லண்டன் அலுவலக அலுவலர்கள் உங்களை விமான நிலையத்தில் வைத்தே அழைத்துச் செல்வார்கள். இருப்பிடவசிதியும் பகுதிநேர வேலைவாய்ப்புகள் பெறுவதற்கும் உதவுவார்கள்.

***Our Courses:***
- ★ Business & Management
- ★ Hospitality and Tourism Management
- ★ Accounting
- ★ Computing & IT
- ★ Administrative Management
- ★ English

OUR SERVICES ARE ABSOLUTELY FREE

***Knowledge Management Systems (PVT) Ltd***

| Colombo Office:- | Chennai Advice Centre:- | London Office:- |
|---|---|---|
| No329, 1 st Floor, Southern Wing, Meewella Building, Galle Road, Colombo-04, SRI LANKA. Tel: 011 2555 243, 077 7300473 | No:1, First Floor, First main road, Karpagam Gardens, Adayar, Chennai-600020, Tel: 044 24900541 | No30-32, Southend, Croydon CRO IDN, United Kingdom. Tel: 00447827777552 M: 00447905038050 |

**KMS-was established in the year 2000 and we have offices in UK, Colombo and India.**
Email: pksuhanthan@yahoo.co.uk
(4049)

# புத்தகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தில் 15.03. 2011 முதல் 30.03.2011 வரை மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் காலை 9.00 முதல் 5.00 வரை நடைபெறவுள்ளன.

இக் கண்காட்சியில் சிறுவர் முதல் பல்கலைக்கழக மாணவர்களுக்கு தேவையான அனைத்துப் புத்தகங்களும் காட்சிக்கும் விற்பனைக்கும் வைக்கப்பட்டுள்ளன. (ந-5)

# விசேட செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவக கல்வி மாணிப்பட்ட நெறி 2009/2011 பிரிவு இரண்டாம் வருட மாணவர்களுக்கான விசேட செயலமர்வுகள் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் (19/03/2011,20.03.2011) காலை 8.30 தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை நடைபெறவுள்ளன.

தேசிய கல்வி நிறுவக ஆசிரிய வலுவூட்டல் திணைக்களத்தைச் சேர்ந்த செயற்திட்ட அதிகாரிகள் இச்செயற்திட்டத்தின் பிரதான வளவாளர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (ந)

**தவறிவிட்டது**

இரு திறப்புக்களுடன் பை, முக்கிய படிவங்களடங்கிய கடித உறை, எள்ளுபாசல், நீர்போத்தலடங்கிய வயரால் பின்னப்பட்ட சதுரப் பை 14.3.2011 பிற்பகல் 1.30-3.00க்கு இடையில் வட்டு. இந்துக்கல்லூரியிலிருந்து துவிச்சக்கரவண்டியில் கந்தர்மடம் வரும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுடன் தொடர்பு கொள்ளவும்.
அ.ச.நா.இராசையா
44 (16) பழம் வீதி, கந்தர்மடம்.
தொ.பே: [illegible]
(4048)

**Walk - in Interview**
**19-03-2011 (Saturday)**

யாழ்.நகர், சவகச்சேரி, நெல்லியடியில் அமைந்துள்ள கிளைகளிற்கு கீழ்க்கண்ட பணியிடங்களிற்கான நேர்முகத்தேர்வு எதிர் வரும் சனிக்கிழமை 8 A.M - 2 P.M வரை யாழ்.நகர் அலுவலகத்தில் நடைபெறும்

- **Student Relation officer** - Female
- **Trainee Instructor** - Male / Female
- **Computer Instructor** - Male / Female
- **Hardware Technician / Faculty** - Male
- **Assistant Lecturer ICT** - Male / Female
- **Assistant Lecturer (Tally,QB)** - Male
- **Lecturer for Multimedia Technology** - Male / Female
- **Lecturer - C,C++,Java,VB & Auto CAD** - Male
- **Lecturer - English Language** - Male

The Applicant should possess 2 Passes in G.C.E. A/L, Recognized Computer Diploma, Fluency in English and ability to work as a team.மேல் குறிப்பிட்ட நகரங்களுக்கு அண்மையில் உள்ள விண்ணப்பதாரிகள் விரும்பத்தக்கது.

**ASIAN COMPUTER EDUCATION**
2G ,Stanley Road, Jaffna.T.P - 021-222-5677
E-mail : asianedu@dialogsl.net
(சி-2703)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011
பெப்ரவரி 19 – ஏப்ரல் 02.
ICC Cricket World Cup 2011

## துளித்துளியாய்...

**போர்ட்டர் பீல்ட்டுக்கு எச்சரிக்கை**

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான ஆட்டத்தில் அயர்லாந்து துடுப்பாட்டவீரர் வில்லியம் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். இந்த ஆட்டமிழப்பு தவறான முறையில் கொடுக்கப்பட்டதாகக் கூறி அயர்லாந்து அணித்தலைவர் போர்ட்டர் பீல்ட் நடுவர் அசோக டி. சில்வாவை விமர்சனம் செய்தார்.

போர்ட்டர் பீல்ட்டின் இந்தச் செயலுக்கு ஐ.சி.சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது போன்ற தவறுகளில் முதன் முறையாக ஈடுபடுவதால் எச்சரிக்கையுடன் மட்டும் விடுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மேற்கிந்தியத் தீவுகள் மரதன்**

பயிற்சியின்போது ஒவ்வொரு அணியும் விதவிதமான விளையாட்டுக்களை ஆடுவது உண்டு. இந்திய வீரர்கள் கால்பந்தும், அயர்லாந்து வீரர்கள் ரக்பியும் ஆடுகின்றனர். இந்நிலையில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரர்கள் வித்தியாசமாக ஓட்டப்பந்தயத்தில் தீவிர பயிற்சி எடுத்தனர்.

**கங்குலிக்கு சான்ஸ்**


ஐ.பி.எல்லில் ஓரம் கட்டப்பட்டுள்ள இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலி டுபாயில் அடுத்தமாதம் 18ஆம் திகதி நடைபெறவுள்ள இருபது-20 தொடரில் எம்.சி.சி அணிக்காக ஆடவுள்ளார்.

**டேவிசன் ஓய்வு**

கனடா அணியின் சகலதுறை வீரர் ஜோன் டேவிசன் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வுபெறவுள்ளார். பத்தாவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் இந்தியத் துணைக் கண்டத்தில் நடைபெறுகிறது. இதில் இன்று நடக்கவுள்ள ஏ பிரிவு லீக் போட்டியில் அவுஸ்திரேலிய – கனடா அணிகள் மோதுகின்றன. இப் போட்டிக்குப்பின் கனடா அணியின் டேவிசன் (41 வயது) சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வுபெறவுள்ளார்.

இவர் கடந்த 2003 இல் நடந்த உலகக் கிண்ண தொடரில் 67 பந்துகளில்111 ஓட்டங்கள் எடுத்து சாதனை படைத்தார். இதுவரை 31 போட்டியில் பங்கேற்றுள்ள இவர் ஒரு சதம் ஐந்து அரைச்சதம் உட்பட 785 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

# ஆஸி. - கனடா இன்று சந்திப்பு



(பெங்களூர்)

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நடப்புச் சம்பியன் அவுஸ்திரேலிய அணி கத்துக்குட்டி கனடாவை இன்று சந்திக்கிறது. அவுஸ்திரேலியா ஏற்கெனவே காலிறுதிக்கு முன்னேறிய நிலையில் இப் போட்டி சம்பிரதாய மோதலாகவே இருக்கும்.

பத்தாவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இந்திய துணைக்கண்டத்தில் நடக்கிறது. இதன் ஏ பிரிவு லீக் போட்டியில் இன்று அவுஸ்திரேலிய– கனடா அணிகள் மோதுகின்றன. பொன்டிங் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி இம்முறையும் அசத்துகிறது. சிம்பாவே, நியூசிலாந்து அணிகளை எளிதாக வென்றது. கென்யாவிடம் சிரமப்பட்டுத்தான் வெற்றிபெற்றது. இதனால் கனடாவை கவனமாக எதிர்கொள்வார்கள் என்று தெரிகிறது.

**ஹசி பலம்**

துடுப்பாட்டத்தில் ஆரம்ப வீரர்கள் வோட்ஷன், ஹடின் இருவரும் அணிக்கு நம்பிக்கை தருகின்றனர். மைக்கல் ஹசியின் வருகையால் நடுத்தரவரிசை உறுதியாகியுள்ளது. கடந்த போட்டியில் அசத்திய ஹசி, துணைத்தலைவர் மைக்கல் கிளார்க் மீண்டும் சாதிக்க முயற்சிக்கலாம்.

பந்துவீச்சைப் பொறுத்தவரையில் அவுஸ்திரேலிய அணிக்கு மிச்சல் ஜோன்சன், தைய்ட், பிரட்லீ ஆகிய மூன்று வீரர்களும் பெரும் பலமாகவுள்ளனர். இருப்பினும் கென்ய அணிக்கு எதிராக இவர்களது ஆட்டம் சற்றும் எடுபடவில்லை. இன்று மீண்டும் அசத்தக் காத்திருக்கின்றனர். சுழலில் ஸ்டீபன் ஸிமித், கிரெஜ்ஜா ஜோடியும் சாதிக்கும் பட்சத்தில் எளிதான வெற்றி கிடைப்பது உறுதி.

**ஆறுதல் கிடைக்குமா?**

கனடா அணி இதுவரை பங்கேற்ற 05 போட்டிகளில் 4ல் தோல்வியடைந்தது. கென்யாவை மட்டும் வீழ்த்திய இந்த அணி உலகக் கிண்ணத் தொடரில் குட்டி அணிக்கு வாய்ப்பு கிடைக்காது என ஐ.சி.சி அறிவித்திருப்பதால், ஏதாவது சாதித்து விடைபெற முயற்சிக்கலாம். இதற்கு அணித்தலைவர் ஆஷிஸ் பகாய், ஹன்ஸ்ரா, ரிஸ்வான் சீமா, சர்காரி போன்றவர்கள் துடுப்பாட்டத்தில் ஆறுதல் தர வேண்டும்.

பந்துவீச்சில் பாலாஜிராவ், பேய்டுவான், ரிஸ்வான் சீமா ஆகியோர் அவுஸ்திரேலிய துடுப்பாட்டத்தை லேசாக அசைத்துப் பார்க்கலாம்.


**26வது வெற்றி**

கடந்த 2003 மற்றும் 2007 உலகக் கிண்ண தொடர்களில், அணித்தலைவர் பொன்டிங் தலைமையில் அவுஸ்திரேலிய அணி தொடர்ந்து 22 போட்டிகளில் வெற்றி பெற்றிருந்தது.

இத் தொடரிலும் இந்த வெற்றிநடை தொடர்கிறது. இன்றும் வென்றால் தொடர்ந்து 26வது வெற்றியைப் பதிவுசெய்யலாம்.

**32 ஆண்டுகளுக்குப் பின்**

அவுஸ்திரேலிய– கனடா அணிகள் கடைசியாக 1979ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் மோதின. இதில் 105 ஓட்டங்களுக்கு கனடா சுருண்டது. பின் அவுஸ்திரேலிய அணி 106/3 என எளிதாக வென்றது. தற்போது 32 ஆண்டுகளுக்குப் பின் இரு அணிகளும் மோதவுள்ளன.



## கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஓர் நற்செய்தி!

MCS இன் ஒரு மில்லியன் ரூபா பரிசை வெற்றிகொள்ள உங்களுக்கு அரிய சந்தர்ப்பம்

தினமும் 5 பேருக்கு
50ஆயிரம் ரூபா வீதம் 100 பேருக்கு
ஒரு மில்லியன் வெற்றிகொள்ளும் வாய்ப்பு
வலம்புரியில் கேட்கப்படும்
உலகக்கிண்ண கேள்விகளுக்கு
சரியான பதிலை அனுப்பி உங்கள் உயர்கல்வி வாய்ப்பை
பெற்றுக்கொள்ளுங்கள்

கூப்பனை வெல்பவர் அல்லது அவரால் வழங்கப்படும் ஒருவர் பின்வரும் கற்கை நெறிகளுக்கு இப் பரிசுக் கூப்பனை பயன்படுத்த முடியும்

1. கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பட்டக் கற்கை நெறி
2. சீமா (லண்டன்) CIMA_UK
3. மைக்கிரோசொப்ற் நிறுவன கணினிப் பொறியியலாளர் கற்கை நெறி
4. அடோப் நிறுவனத்தின் மல்ரிமீடியா கற்கை நெறி

## அரையிறுதிச் சுற்றுக்கு தெரிவாகும் அணிகள்?

1. ........................ 2. ........................
2. ........................ 4. ........................

பெயர்: ..............................
முகவரி: ..............................
..............................
தொ.பே: ..............................
தே.அ.அ.இல: ..............................

சரியான விடையை எழுதி கூப்பனை பூரணப்படுத்தி 22.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர் ஒருவருக்கு ஒலிம்பியா ஸ்போட்ஸ் வழங்கும் பெறுமதியான பரிசு காத்திருக்கிறது.

அனுப்ப வேண்டிய முகவரி
'உலகக் கிண்ணம்'
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

ஒலிம்பியா ஸ்போட்ஸ்
இல06,ஜும்மா பள்ளிவாசல் லேன்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 3490

## இன்றைய கேள்வி?


கடந்த 2007 ஆம் ஆண்டு உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் மர்மமான முறையில் மரணமான பயிற்றுவிப்பாளர் யார்?

..............................

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 18.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு M.C.S வழங்கும் பரிசுக் கூப்பன்.

பெயர்:- ..............................
முகவரி:- ..............................
..............................
தொ.பே:- ..............................
தே.அ.அ.இல:- ..............................

அனுப்ப வேண்டிய முகவரி
'உலகக் கிண்ணம்'
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.



## உலகக்கிண்ண கிரிக்கெட்-2011

சம்பியனாகும் நாடு?..............................

தொடர் நாயகன் விருது யாருக்கு?..............................

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 20.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

பெயர்..............................
முகவரி..............................
தொலைபேசி..............................
தே.அ.அ.இல..............................

'உலகக்கிண்ணம்'
வலம்புரி
இல.3, 2-ம் ஒழுங்கை
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

இன்னும் பல பரிசுகள்

Midea Electro Mart
No:1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA.

ESPN
இ.ச.பே. நாகரத்தினம் சக நிறுவனம்
52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

JAFFNA ELECTRICAL
94(6), Stanley Road, Jaffna.
Tel: 021 222 2353
Fax: 021 222 4302
E-mail:matheesan16@yahoo.com

SINGER-Manipay
Alady Junction, Manipay.
T.P.:021 225 5343
077 6139592

PCS PC SOLUTIONS TECHNOLOGIES (PVT) LTD
305,Kasthuriyar Road,Jaffna
T.P:021 2221101,021 2229644
email:- pcsjaffna@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அச்சுவேலி புனித தெரேசா மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையையும் பிரதம விருந்தினரான இயற்கை பண்பாட்டு மரபு வளப்பேணுகை மையத்தின் தலைவரும் சூழலியலாளருமான பொ.ஐங்கரநேசன், சிறப்பு விருந்தினர்களான பிரிகேடியர் கீர்த்தி கொஸ்ரா, கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி வே.பாலசுப்பிரமணியம், அருட்தந்தை ஜெ.அன்ரனிபாலா, கல்லூரி அதிபர் அருட்சகோதரி மரியறோசாறியோ ஆகியோர் அமர்ந்திருப்பதையும் வெற்றியீட்டிய மாணவிக்கு பிரதம விருந்தினர் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## கூட்டம்

(பொலிகண்டி)

அல்வாய் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் முதியோர் சங்கம் அமைத்தல் தொடர்பான கூட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை காலை 11 மணிக்கு அல்வாய் இளங்கோ பொதுமண்டபத்தில் கிராம அலுவலர் சி.சிவபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் 60 வயதிற்கு மேற்பட்ட இருபாலாரையும் தவறாது சமுகம் தருமாறு கிராம அலுவலர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-48)

## ஸ்ரீ அம்மா பகவான் ஆரோக்கிய தீட்சை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ அம்மா பகவான் ஆரோக்கிய தீட்சை நிகழ்வு எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தில் நடைபெறவுள்ளது.

நோய்களினால் துன்ப துயரப்படும் மக்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பிரார்த்தனை மையத்தினர் அன்புடன் அழைக்கின்றனர். (ஸ்ரீ-3)

## மகளிர் தின விழா

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலக மகளிர் தினவிழா நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலர் சி. சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வும், நடன நிகழ்வு, பட்டிமன்றம் உட்பட பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஸ்ரீ)

## சுனாமி வீட்டுத்திட்டம் இன்னும் பூரணப்படுத்தப்படவில்லை

### மக்கள் விசனம்

பருத்தித்துறை திக்கம் பகுதியில் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கட்டப்பட்ட 50இற்கு மேற்பட்ட வீடுகள் 5 வருடங்களாகியும் இன்னமும் முழுமையாகப் பூரணப்படுத்தப்படாமல் அரைகுறையாகக் காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

உலக வங்கியின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்ட குறித்த வீடுகள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாததால் உரியவர்கள் தமது வீடுகளில் தங்கியிருக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

சில வீடுகளில் சில குடும்பங்கள் கஷ்டங்களின் மத்தியிலேயே இருப்பதனையும் சிலர் வீடுகள் பூர்த்தியடையாததால் வேறு இடங்களில் இன்னமும் தங்கியிருப்பதாகவும் தெரியவந்துள்ளது. (ஸ்ரீ-3-10)

## வீதி புனரமைக்கக் கோரிக்கை

(மாதகல்)

பண்டத்தரிப்பிலிருந்து மாதகலுக்குச் செல்லும் பிரதான வீதி புனரமைப்புச் செய்யப்படாது குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இதனால் இவ்வீதியால் பயணிப்போர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர். மேலும் வீதி விபத்துகள் ஏற்படும் அபாய நிலையும் காணப்படுகின்றது.

எனவே உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-47)

## கனடா நம்பிக்கை இல்லத்தினால் 14 புதிய கணனிகள் அன்பளிப்பு

கனடாவிலுள்ள நம்பிக்கை இல்லத்தினால் வேலாயுதம் மகா வித்தியாலயத்திற்கு 14 புதிய கணனிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் தரம் 6 தொடக்கம் தரம் 9 வரையான மாணவர்கள் பயன்பெறவுள்ளனர். இதற்கான கணனியறையை பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தினர் அமைத்துக் கொடுத்துள்ளனர்.

இதனை பாடசாலை அதிபர் ச.திரவியராசா தலைமையில் முன்னாள் அதிபர் ஆ.ஜெகநாதன் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

இம்மாணவர்களுக்கான இலவச வகுப்புகளை மாலை நேரத்தில் நடத்துவதற்கு கணனி ஆசிரியர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை இவ்வித்தியாலயத்தில் அரசினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட கணனி மூலவள நிலையத்தில் தரம் 10 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்கள் கற்பதற்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-19)

## பண்ணிசைப் போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 10, 11 ஆகியவற்றில் சைவசமயம் கற்கும் மாணவர்களுக்கான பண்ணிசைப் போட்டி எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கலந்துகொள்ளும் மாணவர்கள் கலாசார உடையுடன் உரிய நேரத்திற்கு வருகை தருமாறும் விண்ணப்பப் படிவம் அனுப்பிய பாடசாலை மாணவர்கள் மட்டும் கலந்து கொள்ளலாம் என்றும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-29)

## செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் பயிற்றப்படாத ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான பின்னூட்டலுக்கும் மீளாய்வுக்குமான செயலமர்வு எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பி.ப 4.30 மணிவரை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி செயலமர்விற்கு பெயர் குறிப்பிட்டு அறிவிக்கப்பட்ட 30 ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-29)

## அச்சுவேலியிலிருந்து வல்லை செல்லும் பிரதான வீதி சேதமடைந்துள்ளது

### போக்குவரத்து சேவைகள் ஸ்தம்பிதம்

(பருத்தித்துறை)

அச்சுவேலியிலிருந்து வல்லை செல்லும் பிரதான வீதி பலத்த சேதமடைந்து போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையிலுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால் போக்குவரத்துச் சேவைகளும் ஸ்தம்பிதம் அடையும் நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக அப்பகுதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே, மேற்படி வீதியை புனரமைப்புச் செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புதுத்தடை திறப்பு விழா

லக்ஷ்மி பவான் சைவ உணவகம்

நிகழும் மங்களகரமான விகிர்தி வருடம் பங்குனி மாதம் 2ஆம் திகதி (16.03.2011) காலை 10-15க்கும் 11-15க்கும் உள்ள சுபவேளையில் பிள்ளையார் துணை கொண்டு கே.கே.எஸ். வீதி, உப்புமடச்சந்தி, கோண்டாவில் எனும் முகவரியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

லக்ஷ்மி பவான் சைவ உணவகம்

இங்கு அனைத்து வகையான காலை, மாலை, மதிய, சகல வகையான உணவுகளையும் சுகாதார முறைப்படியும், சுத்தமாகவும் சுவையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு:- ஓடர்கள் செய்து தரப்படும்.

உப்புமடச் சந்தி, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

(4047)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மூச்சு

ஒரு ஆள் அசையாமல் கிடக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் இருக்கிறாரா? போய்விட்டாரா என்பது எப்படி முடிவு செய்கிறோம். அவருடைய மூக்குக்கு முன் புறங்கையை வைத்துப் பார்க்கிறோம்.

மூச்சு என்பது அவ்வளவு முக்கியமான ஒரு விடயம். சுவாசமில்லையெனின் எதுவுமே இல்லை.

நமது பூமி இருக்கிறதே அதுகூட சுவாசிக்கிறது என்பதை சோபியத் விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

பூமிக்கு மேலுள்ள மண்ணடுக்கில் காற்றில் உள்ள ஒட்சிசன் ஒட்சிசகரணமடைகிறது என்றுதான் இதுவரைக்கும் எல்லோரும் நம்பிக் கொண்டிருந்தார்கள். ஆனால் இப்பொழுது அந்த ஒட்சிசன் பூமிக்குள் 1 கிலோமீற்றர் ஆழம் வரைக்கும் ஊடுருவிப்போகிறதாம் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

பூமிக்குள் இரண்டு பக்கமும் பல கிலோமீற்றர் வரைக்கும் பரவுகிறதாம். பூமிக்குள் இருக்கும் நீர்நிலை அடுக்குகள்தான் நுரையீரல் செய்யும் வேலை செய்கிறதாம்.

நம் உடம்பில் நுரையீரல் இல்லையென்றால் ஒன்றும் நடக்காது. ஒரு மரத்தை தலைகீழாக தொங்கப்போட்டால் எப்படியிருக்கும்?

அப்படித்தான் இதுவும் (நுரையீரல்) இருக்கும்.

வலது பக்கம் ஒன்று இடதுபக்கமொன்று வலது பக்க நுரையீரல் கொஞ்சம் பெரிதாக இருக்கும். நுட்பமான நரம்புக் குழாய்கள் அதிலிருக்கும்.

கோடிக்கணக்கான நுண்ணிய குழாய்களை வைத்துக் கொண்டுதான் அது இயங்குகிறது. 25 கோடி குழாய்கள் இருக்கும். அதை அப்படியே முழுதாக பிரித்துப்பரப்பினால் ஒரு டென்னிஸ்கோர்ட்டில் அரை பரப்பளவு இருக்குமாம் நுரையீரலின் நிறம் கரும் சிவப்புத்தான். புகை அதிகமாக உள்ளேபோய் விட்டால் அது கறுப்பாகிவிடுகிறது.

காற்றிலுள்ள பிராண வாயுவை இது இழுத்து எடுத்துக் கொண்டு இரத்தத்தை சுத்தப்படுத்தும் முக்கியமான வேலையை செய்கிறது. அசுத்தக்காற்றை வெளியே அனுப்பி விடுகிறது. ஒருத்தர் வேகமாக ஓடிவருகிறார். அவருக்கு மூச்சிரைக்கும். பயங்கரமாக எதையாவது பார்த்துவிடுகிறார். உடனே மூர்ச்சையாகிவிடுவார்.

இப்படியான சமயங்களில் வேறெந்த தூண்டுதலும் இல்லாமல் நுரையீரல் தானாகவே இயங்கும். இப்படியொரு அவசிய மேற்படும்போது இயக்கத்தை தூண்டிவிடும் முக்கியமான இணைப்பு மூளைக்கு கீழே முதுகு எலும்புக்கு மேற்பகுதியில் இருக்கிறது. அது உடனே சுவாசத்திற்கு அவசர உதவியை கொடுக்கிறது.

ஒருத்தர் பேசாமல் உட்கார்ந்திருக்கும் போது அவருக்கு ஒரு பங்கு காற்று தேவைப்படுகிறது. அவர் எழுந்து நடக்கும் போது ஒன்றரை மடங்கு தேவைப்படும்.

ஓடினால். மூன்று மடங்கு தேவைப்படும்; படுத்திருக்கும் போது அரை மடங்குதான் தேவைப்படும். இதற்கு நிமிடத்துக்கு 16 தடவை மூச்சு விடவேண்டும். இப்படி சாதாரணமாக உள்ளே இழுக்கும் காற்று கொஞ்சம் தான் இருந்தாலும் இதுபோன்று 8 மடங்கு காற்றை உள்ளிளுத்து வைத்திருக்கும் சாமர்த்தியம் நுரையீரலுக்கு இருக்கிறதாம்.

தண்ணீர், நுண்கிருமிகள், இரசாயனப் பொருள் இப்படி எது உள்ளே போனாலும் நுரையீரல் சமாளிக்கும். 30 வருடமாக விடாமல் புகைப்பிடிப்பவர் தொடர்ந்து உள்ளே அனுப்பிவைக்கும் புகையை கூட சமாளிக்கிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

உள்ளேபோகும் புகை நுட்பமான சுவாச மூச்சுக்களை அழித்து விடுகிறது. கரிப்புகைஅதன்மேல் படிந்து உபயோகமில்லாமல் பண்ணிவிடுகிறது. ஆனாலும் தேவைக்கதிகமாக 8 மடங்கு கூடுதலாக சுவாச மூச்சுக்கள் நம் உடம்புக்குள் இருக்கிறது. அதனால் சமாளிக்க முடிகிறது.

சமாளிக்க முடியவில்லையானால் சில சமயம் மூச்சுத் திணறும். அதை ஒரு எச்சரிக்கையாக எடுத்துக்கொண்டு புகைப்பிடிக்கும் பழக்கத்தை விட்டுவிட வேண்டும்.

ஆனால் அப்படி யார் விடுகிறார்கள்? இணைபிரியாத இரண்டு நண்பர்கள் இருந்தார்கள். அவர்கள் இருவரும் தொடர்ந்து சிகரெட் குடித்துவந்தார்கள். அதில் ஒருத்தன் இறந்துவிட்டான். இன்னொருவன் அதன்பின் இரண்டு இரண்டு சிகரெட்டாக குடிக்க ஆரம்பித்தான்.

"ஏன் இப்படி செய்கிறாய்?" என்று கேட்டார்கள்.

"நான் ஒரு சிகரட் தான் குடிக்கிறேன். இறந்து போன என் நண்பனுக்காக இன்னொரு சிகரெட் குடிக்கிறேன்" என்றான்.

"இது மிகவும் ஆபத்து விட்டுவிடு" என்றார்கள்.

"சரி" என்று ஒத்துக் கொண்டான்.

ஆனால் அதன் பின்னரும் ஒரு சிகரெட் வீதமாக குடித்துக் கொண்டிருந்தான். "சிகரெட் பழக்கத்தை நீ இன்னும் விடவில்லையா?" என்று கேட்டார்கள்.

அந்த பழக்கத்தை நான் எப்பவோ விட்டுவிட்டேன். இப்ப நான் குடிக்கிறது என் நண்பனுக்காக என்றான். இவர்களையெல்லாம் எப்படி சரிபண்ணுவது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தம்மை விடுதலை செய்யுமாறு வவுனியா சிறைக்கைதிகள் ஜனாதிபதியிடம் கோரிக்கை

எமது விடயத்தைக் கவனத்தில் எடுத்து எம்மை விடுதலை செய்யுங்கள் அல்லது பிணையில் செல்வதற்காவது அனுமதியுங்கள் என வவுனியா சிறைச்சாலையில் விசாரணையின்றி தடுத்து வைக்கப் பட்டுள்ள கைதிகள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது, நாம் கடந்த மூன்று தசாப்தங்களாக சொல்லொணா துன்பங்களை அனுபவித்து வருகின்றோம். கடந்த காலங்களில் எமது விடுதலை தொடர்பாக பலர் வழங்கிய வாக்குறுதிகள் எதுவுமே இதுவரை நிறைவேற்றப்படவில்லை. எங்களில் அநேகமானோர் திருமணமானவர்கள். பல வித மான தொழில் துறைகளில் ஈடு பட்டு வந்தவர்கள். குறிப்பாக நாம் எதுவித முடிவுகளுமில்லாமல் மீதியான தீர்வுகள் எதுவும் எட்டப்படாமல் எதற்காக எம்மை நீண்ட காலமாய் தடுத்துவைத்திருக்கிறார்கள் என்று தெரியாமல் சிறை வாழ்க்கை அனுபவித்து வருகிறோம்.

குறிப்பாக எமது வழக்குகளுக்கு ஒரு சட்டத்தரணியைக்கூட அமர்த்துவதற்கு முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறோம்.

மிகமோசமானதாகவும் பிள்ளைகளின் கல்விநிலை சீரழிந்தும் இருக்கின்றது.

தற்போதைய சூழ்நிலையில் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நீதிமன்ற செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அதனைவிட கடந்தகாலத்தில் இருந்த யுத்த சூழ்நிலை முற்றிலும் நீங்கியுள்ளது.

எனவே எமதுவிடயத்தை கவனத்தில் எடுத்து எம்மை விடுதலை செய்யுங்கள். அல்லது பிணையில் செல்வதற்கு அனுமதியுங்கள். அவசரகால சட்டம் மற்றும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின்கீழ் பிணைவழங்குவதற்கான விசேட ஏற்பாடொன்றைச் செய்து தாருங்கள்.

இலங்கையிலுள்ள சகல சிறைச்சாலை களிலும் 600 க்கு மேற்பட்ட அரசியல் கைதிகள் மிக நீண்ட காலமாய் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதனை தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறோம் என்று தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரல்

தீவகக் கல்வி வலயத்தில் யா/நாரந்தனை றோ.க.த ம.வித்தியாலயம் , யா/மெலிஞ்சிமுனை றோ. க.த. வித்தியாலயம், யா/ புங்குடுதீவு துரைசுவாமி வித்தியாலயம், யா/ ஊர்காவற்றுறை ஆண்கள் றோ.க. வித்தியாலயம், யா/ புங்குடுதீவு றோ.க. வித்தியால யம், யா/ சரவணை சின்ன மடு றோ.க. வித்தியாலயம், மண்கும் பான் அ.த.க பாடசாலை ஆகிய பாடசாலைகளில் அதிபர் பதவிக்கு வெற்றிடம் நிலவுகின்றது.

இப்பதவிக்கு தீவகத்தில் கடமையாற்றும் இலங்கை அதிபர் சேவையினைச் சார்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன. அதிபர் தரத்தினைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்காதவிடத்து கடமை நிறைவேற்று அடிப்படையில் அதிபர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காக இலங்கை ஆசிரியர் சேவை தரம் I, தரம் -2 -Iஐ சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் எனவும் தீவக வலயக்கல்விப்பணிப்பாளர் வி.இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

இதற்கான விண்ணப்பங்களை வலயத்தில் பெற்று எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு அவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-9)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 100 | 150 | 150 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 150 | 200 | 200 | 240 |
| தக்காளி | 80 | 150 | 160 | 130 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 50 |
| கோவா | 80 | 80 | 100 | 100 |
| கரட் | 140 | 160 | 200 | 180 |
| பூசணி | 60 | 60 | 80 | 60 |
| புடோல் | 70 | 80 | 100 | 80 |
| வாழைக்காய் | 60 | 50 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 70 | 80 | 100 | 110 |
| பெரிய வெங்காயம் | 60 | 60 | 80 | 70 |
| பாகற்காய் | 120 | 120 | 160 | 150 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 140 | 150 |
| கருணைக் கிழங்கு | - | 80 | 120 | 100 |
| பயற்றங்காய் | 100 | 120 | 120 | 170 |
| லீக்ஸ் | 100 | 130 | 140 | 140 |
| பீற்றூட் | 60 | 60 | 100 | 60 |
| கறிமிளகாய் | 120 | 80 | 200 | 180 |
| முருங்கைக்காய் | 300-350 | 600 | 600 | 500 |
| போஞ்சி | 100 | 120 | 140 | 150 |
| கத்தரிதம்புள்ள | 40 | 80 | 120 | 130 |
| கீரை - 1 பிடி | 5-10 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 30-60 | 50 | 80 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 60 | 50 |

# இராசி பலன்

*16.03.2011*
*(பங்குனி 02, புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு*
*ஏகாதசி முற்பகல் 9.04 மணிவரை*
*பூசம் பிற்பகல் 2.58 மணிவரை*
*இராகுகாலம் 12.20-1.50 மணிவரை*
*சுபநேரம் 4.50-6.20மணிவரை*
*ஏகாதசி விரதம்*

**மேடம்** வெளியூர்த்தொடர்புகள் அதிகரிக்கும், பெற்றோர் ஆதரவால் பெருமை சேரும் நாள், அலைச்சல் ஏற்பட்டாலும் ஆதாயம் ஏற்படலாம், சுப செய்திகள் வந்து சேரும்.

**இடபம்** நீண்டநாளைய பிரச்சினைகள் இன்று நல்லமுடிவுக்கு வரும், குடும்பத்தினர் பாராட்டும் வகையிலான காரியங்களை செய்து முடிப்பீர்கள், சகோதரர்கள் உதவ முன்வருவர்.

**மிதுனம்** இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், தனவரவு திருப்திகரமாக அமையும், விலைஉயாந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், சுபகாரியப்பேச்சுகள் முடிவாகி நல்ல முடிவைத்தரும்.

**கடகம்** பயனாளிகளால் பலன் கிடைக்கும், உடல் நலன் சீராகி உற்சாகமடைவீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண்பீர்கள், சிந்தனை மிகுதி உண்டு.

**சிங்கம்** சந்தித்த நண்பர்களால் சந்தோசம் காணவேண்டிய நாள், மனச் சஞ்சலம் அதிகரிக்கும், மாலை நேரம் மகிழ்ச்சிக்குரிய பயணமொன்று இடம்பெறலாம்.

**கன்னி** விருந்தினரை வரவேற்று வியப்படையும் நாள், எடுத்தகாரியங்கள் எளிதில் நடைபெறும், பயணவாய்ப்புக்கள் கைகூடும், தனவருவாய் திருப்தி தரும்.

**துலாம்** தூரதேச செய்திகள் மகிழ்ச்சியை தரும், தேடிச் சென்றவர்கள் நாடிவந்து உதவிசெய்வார்கள், வீடுகட்டும் பணியைத்தொடரும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்** கடந்த சில நாட்களாக தடைப்பட்ட சிலகாரியங்கள் நிறைவேறலாம், மதிப்பும் மரியாதையும் உயரும், தொழில் நலன்கருதி புதிய திட்டங்கள் வகுப்பீர்கள்.

**தனுசு** திடீர்செலவுகளை செய்ய பிறரிடம் கடன்வாங்க நேரிடலாம், எதிர்பாராதவகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**மகரம்** நினைத்த காரியம் எளிதில் நிறைவேறும், ஆலயவழி பாட்டில் ஆர்வம் காணப்படும், செய் தொழிலில் முன்னேற்றமுண்டு,

**கும்பம்** உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள் , தைரியமும் தன்னம்பிக்கையும் வளரும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மீனம்** பிள்ளைகளால் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், உஷ்ண சம்பந்தமான ரோகநிலையுண்டு போசன சுகமுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தலை இலக்கு வைத்தே திவிநெகும திட்டம்



## கரு ஜயசூரிய எம்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்கு வைத்து அரசாங்கம் திவிநெகும திட்டத்தை முன்னெடுத்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

திவி நெகும திட்டத்தின் கீழ் கால்நடைகள், மரக்கறி விதைகள் மக்களுக்கு வழங்கப்படுகின்றன.

இந்தத் திட்டம் முழுவதும் தேர்தலை இலக்கு வைத்து அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாணந்துறை பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

மக்கள் இவ்வாறான சூழ்ச்சித் திட்டங்களுக்கு ஏமாந்து விடக் கூடாது என கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த காலத் தேர்தல்களின் போது வேலைவாய்ப்பு தருவதாக கோரி திரட்டப்பட்ட பெரும் எண்ணிக்கையிலான விண்ணப்பப்படிவங்கள் குப்பைத் தொட்டிகளில் மீட்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் காலங்களில் அரசாங்கம் வழங்கும் வாக்குறுதிகள் தொடர்பில் மக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் காலங்களில் கட்சிகளுடன் கூட்டு சேர்வதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறுபான்மையின தலைவர்களை தமது கட்சியே உருவாக்கும் எனவும் கடந்த காலங்களைப் போன்று கூட்டணி பொறியில் எதிர்காலத்தில் சிக்கப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார். (ஶ்ரீ-2)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக் கிடையிலான மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி தலைமையில் நடை பெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வலிகாம வலய கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன், சிறப்பு விருந்தினராக கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.நாகராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஶ்ரீ-2)

## மட்டக்களப்பில் வெடிபொருட்கள் மீட்பு

(கொழும்பு)

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் ஒன்றினையடுத்து அதிசக்தி வாய்ந்த வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவல் ஒன்றை அடுத்து மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது மட்டக்களப்பின் மகிழடித்தீவு பிரதேசத்திலேயே மேற்குறித்தவாறான வெடி பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சீ 4 ரக வெடிபொருட்கள் 250 கிராம் மற்றும் ஏனைய வெடி பொருட்கள் சிறிய அளவிலும் கைப்பற்றப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவிக்கின்றனர். ஆயினும் சந்தேகத்தின் பேரில் யாரும் இதுவரை கைது செய்யப்படவில்லை என்பதுடன் தற்போது அது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஶ்ரீ-2)

## நல்லூர் கோட்டமட்ட மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டமட்ட மெய்வல்லுநர் போட்டியின் முதலாம் நாள் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி நாகலிங்கம் மைதானத்தில் நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி. மாணிக்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம், சிறப்பு விருந்தினராக முன்னாள் உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ப. குமாரசாமி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஶ்ரீ-9)

## தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்

கிளிநொச்சி மாவட்டம்

Private Bus Owners Society

Kilinochchi District

### பாடசாலைப்பணி தொடர்பாக

மேற்படி பாடசாலைப்பணி கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக இலவசமாக சேவை செய்து வருகின்றது. தற்பொழுது மாணவர்களுக்கு பருவகாலச்சிட்டை வழங்கப்பட்டுள்ள நிலையில் இலவச பாடசாலை சேவை நிறுத்தப்பட்டுள்ளது. மாறாக பயணிகள் சேவை ஊர்தியில் மாணவர்கள் பருவகாலச் சிட்டையை வழங்கி பயணிக்கலாம் என்பதனை அறியத்தருவதுடன், பயணிக்க அனுமதிக்காத பேருந்து இலக்கத்தை எமக்கு அறியத்தரும்படி வேண்டுவதோடு பருவகாலச்சிட்டையை பெற்றுக்கொள்ளாத மாணவர்களுக்கு அரைக்கட்டணம் அறவிடப்படும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

ரீ.ஜெகதீஸ்வரன்
தலைவர்,
தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்.
கிளிநொச்சி.
(4044)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு
13.08.1930

உதிர்வு
16.02.2011

### அமரர் திருமதி சிவஞானம் சிவரத்தினம்

(ஊரெழு/ வவுனியா)

திதி:- திரயோதசி

கடந்த 16.02.2011 அன்று சிவபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டி கிரியைகள் (16.03.2011) இன்று புதன்கிழமை கல்லாற்றில் நடைபெற்று சபிண்டீகரணக் கிரியைகள் (18.03.2011) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எங்கள் இதய தெய்வத்தின் பிரிவுத்துயரில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் துயர் பகிர்ந்து கொண்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டு அனுதாபச் செய்திகள் வெளியிட்டோருக்கும் எமக்கு பலவழிகளிலும் உதவிபுரிந்தவர்களுக்கும் எமது இதயங் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் பிரிவினால் துயருறும் மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், குடும்பத்தினர்.
24, குளப்பள்ள வீதி, சின்னப் புதுக்குளம், வவுனியா.
024 222 4427, 024 222 4422
(4046)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பாலசுந்தரம் பாலாம்பிகை



பண்டத்தரிப்பு, வடலியடைப்பை பிறப்பிடமாகவும், செட்டிக் குறிச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசுந்தரம் பாலாம்பிகை அவர்கள் 15.03.2011 நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை அகவை 94 இல் இறையடி எய்தினார்.

அன்னார் அமரர் க.பாலசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும், அமரர்கள் சிவப்பிரகாசம் -இராசம்மா தம்பதியரின் மகளும், அமரர்கள் கனகசபாபதி- நாகரத்தினம் தம்பதியரின் மருமகளும், பேரின்பதேவி(இன்பம்), நித்தியானந்தன் (அமரர்),சர்வானந்ததேவி(ரஜனி), சிவானந்தன்(சிவா), கௌரி, சுந்தரகுமாரி ஆகியோரின் அன்பு அன்னையும், விவேகானந்தன் (அமரர்), கமலாம்பிகை, நடேசப்பிள்ளை சாரதாதேவி(ராதா), குருபாததாசர் (குஞ்சாம்பி), கார்த்திகைக்குமரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சிறீஸ்கந்தவேள்(அமரர்), சிறீசங்கரன், சிறீகஜானன், சிறீபங்கஜா, சிறீதாட்சாயினி, சிறீஜனனி, சிறீபவானி, நிதிலன், வித்யா, டிலக்ஷி, டுஸ்யந்தன், நிவேதிகா, கார்த்திகா ஆகியோரின் அருமைமிகு பேர்த்தியும், சேரன், நிதிலன், ஸ்வாதி, சௌமியா, வருண், அஸ்வின், பிரவீனா, ஷயமி, ஹரிஷ், ஸ்ருதிகா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (16.03.2011) இன்று புதன்கிழமை காலை 11.00 மணிக்கு செட்டிக்குறிச்சியில் நடைபெற்று தகனக்கிரியைக்காக சம்பில்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செட்டிக்குறிச்சி,
பண்டத்தரிப்பு

தகவல்:
பா.சிவாநந்தன்(சிவா)
மகன்.

(சி-2702)

## திருமதி வேலுப்பிள்ளை மகேஸ்வரி



கரவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலுப்பிள்ளை மகேஸ்வரி 12.03.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பண்டிதர் சிற்றம்பலம்- லட்சுமி தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் உமா, பாமா(சுவிஸ்), சித்திரா, அம்பிகா (அவுஸ்திரேலியா) , சித்கணேசன்(கனடா), மல்லிகா(கனடா), சிவபாலன்(கனடா), தேவிகா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சரவணமுத்து, சோமசுந்தரம் (சுவிஸ்), காலஞ்சென்ற சிவானந்தம் மற்றும் குலசிங்கம் (நியூசிலாந்து), சுசீலா(கனடா), வசந்தகுமார்(கனடா), பிருந்தா(கனடா), காண்டீபன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், அகிலன், மாதினி, சுகன்யா, கீர்த்திகன், கபிலன், கலாதன், யோகானந், நிலூசன், கொசிதிவ்யன், மாதுரி, தர்சினி, ஐங்கரன், ஜனனி, சுவேதா, சரண், அம்பிக்கா, அவிசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவில் சனிக்கிழமை (19.03.2011) அன்று நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"பண்டிதவாசம்"
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.
தொ.பே: 0212263042

தகவல்:
ச.உமா(மகள்)

(சி-2616)

# இந்தியாவினால் வழங்கப்பட்ட புகையிரத பெட்டிகள் தரமற்றவை

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட புகையிரதப் பெட்டிகளை இலங்கை அரசாங்கம் தரமற்றவை என்று கூறி நிராகரித்துள்ளது. இந்தியாவினால் 20 பெட்டிகள் வழங்கப்படுவதாக இருந்தது.

அவற்றினுள் 3 தொகுதிப் பெட்டிகள் ஏற்கனவே இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

அதில் ஒரு தொகுதி மாத்தறைக்கும் கொழும்புக்கும் இடையிலான புகையிரத சேவை க்கு உட்படுத்தப்பட்டிருந்தது. எனினும் சேவைக்கு உட்படுத்தப்பட்ட சில தினங்களிலேயே அவை பழுதடைந்தன.

இதனையடுத்து எஞ்சியுள்ள 17 பெட்டிகளையும் இலங்கைக்கு கொண்டு வருவதில்லை என அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (ஶ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கிரஸ் பொதுச் செயலர் ராகுல்காந்திக்கு

# தமிழருவி மணியன் எழுதும் கடிதம்



அடுத்தவர் தோள்களில் ஆரோகணித்து அமர்ந்தபடி, சொந்தக் கால்களில் நடப்பதாய் கற்பனை செய்து நாட்டாமை நடத்துவதில் வல்லவர்கள்.

இரு திராவிடக் கட்சிகளும் கடந்த 40ஆண்டுகளாய் மாறி மாறித் தோள் கொடுப்பதைத் தவிர்த்து இருந்தால், இந்த மனிதர்களின் முகங்களை எம் மக்கள் என்றோ மறந்திருப்பர். காமராஜர் கண்மூடிய பின்பு கால நடையில் காங்கிரஸே காணாமல் போயிருக்கும்.

காங்கிரஸ் இங்கு கட்டெறும்பாய்த் தேய்ந்ததற்கு உங்கள் குடும்பம்தான் முதல் காரணம். டில்லி தலைமைக்குக் காவடி தூக்குவதைத் தவிர இங்குள்ள காங்கிரஸ் தலைமைக்கு வேறு எந்த அதிகாரம் வழங்கப்பட்டு இருக்கிறது? கட்சிக்குள் தேர்தல் நடந்து 40 ஆண்டுகள் கடந்துவிட்டன.

நியமனத் தலைவர்கள், தொண்டர்களை மதிப்பதே இல்லை. நீங்கள் மாவட்ட, மாநில அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்தாமல், இளைஞர் காங்கிரஸுக்கு மட்டும் தேர்தல் நடத்தியதே தவறு.

அழுகிப்போன வேர்களை விட்டு விட்டுக் கிளைகளைக் காப்பாற்ற முடியுமா? நீங்கள் பெருமைப்படும்

மக்கள் வெறுப்புக்கு அஞ்சிய உங்கள் பாட்டி, தேர்தல் நடத்த விரும்பினார். ஆனால், உங்கள் சிறிய தந்தை சஞ்சய் காலாகாலமும் நேரு குடும்பமே இந்த மண்ணை அரச குடும்பம் போன்று ஆள வேண்டும் என்று திட்டமிட்டார்.

ஸ்வரன்சிங் தலைமையில் 12பேர் கொண்ட குழுவை அமைத்து புதிய அரசியல் சட்டத்தை உருவாக்க, இந்திராவின் இசைவையும் பெற்றார். வாழும் காலம் முழுவதும் இந்தியாவின் குடியரசுத் தலைவராக இந்திரா இருக்க விதி உருவாக்கப்பட்டது.

புதிய அரசியல் சட்டத்தை வரவேற்று அரியானா, மேற்கு வங்கம், பஞ்சாப் சட்டமன்றங்களில் தீர்மானம் நிறைவேறச் செய்தார் சஞ்சய். இறுதியில் இந்திரா, மகனை மீறித் தேர்தல் நடத்தித் தோல்வியைத் தழுவினார்.

இந்த விபரங்களை நீங்கள் விரிவாக அறிந்துகொள்ள விரும்பினால்... இந்திரா காந்தியின் முதன்மைச் செயலராக இருந்த பி.என்.தர் எழுதிய 'இந்திராகாந்தி, தி.எமர்ஜென்சி அண்ட் இண்டியன் டெமாக்ரசி' புத்தகத்தைப் படியுங்கள்!

ராஜீவ் மரணத்துக்குப் பின்னர் காங்கிரஸ் வாக்கு வங்கி சரிந்துவிட்டது. நாடாளுமன்றத்தில் 200 இடங்களைப் பெறுவதே அரிதாகிவிட்டது.

1996இல் 28.80, 1998இல் 25.82, 1999இல் 28.30, 2004இல் 26.53, 2009இல் 28.55 விழுக்காடு வாக்கு களைத்தான் காங்கிரஸ் தேசிய அளவில் பெற்றுள்ளது.

அப்படியானால், 72 விழுக்காடு வாக்காளர்கள் காங்கிரஸை ஆதரிக்கவில்லை என்பது புரிகிறதா ராகுல்? இந்திய வாக்கு வங்கியில் 13.5 விழுக்காடு வாக்காளர்கள் முஸ்லிம்கள்.

அவர்கள் காங்கிரஸைக் கை கழுவி நீண்டகாலம் ஆயிற்று. சிறுபான்மை மக்களும், தலித்களும் இனி காங்கிரஸை நம்புவதாக இல்லை. இதற்குக் காரணம் என்ன? 'வறுமையே வெளியேறு' என்று வாய் ஜாலம் காட்டினார் இந்திரா.

அவர் வெளியேறச் சொன்ன வறுமை 40 ஆண்டுகளுக்குப் பின்பும் அசைந்து கொடுக்கவில்லை. இன்றும் 437 மில்லியன் மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாடி நிற்கின்றனர். உங்கள் ஆட்சியில் உண்மையில் பயன் பெற்றவர்கள் யார்? இந்தியாவின் ஏற்றுமதி 1988முதல் 2008 வரை 15 மடங்கு உயர்ந்துள்ளது. இறக்குமதி 13 மடங்கு அதிகரித்துள்ளது.

ஆனால், இரண்டு கார்ப்பரேட் நிறுவனங்களின் கைகளில்தான் நாட்டின் மொத்த உற்பத்தியில் நான்கில் ஒரு பங்கு குவிந்துகிடக்கிறது. இது போன்ற இழிநிலை உலகின் எந்த நாட்டிலும் இல்லை.


# நீங்கள் செய்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்ப்புப் பெறுவீர்கள்!

'ஏழைகளுக்கு ஒரு ரூபாவை அரசு ஒதுக்கினால், அதில் 10 பைசாதான் அந்த ஏழையைச் சென்றடைகிறது. இது என் தந்தை சொன்னது. இந்த நிலைமாற வேண்டும். உண்மையில் உழைப்பவர் நிலை உயரவேண்டும்' என்று சொன்னீர்களே... சமத்துவ சமுதாயத்தைச் சமைக்க உங்களிடம் இருக்கும் மந்திரக்கோலை எப்போதுதான் பயன்படுத்துவீர்கள்? தமிழகத்தில் நீங்கள் ஆட்சியைப் பிடிக்கும் வாய்ப்பு இந்த ஜென்மத்தில் இல்லை.

ஈழத் தமிழர்களுக்கு உங்கள் காங்கிரஸ் செய்த துரோகம் எங்கள் வருங்காலத் தலைமுறையாலும் மறக்க முடியாது.

இனவுணர்வு மிக்க இளைஞர்களின் எண்ணிக்கை இன்று பல்கிப் பெருகி வருகிறது. அவர்கள் ஒரு நாளும் காங்கிரஸுக்கு வாக்களிக்கப் போவதே இல்லை.

தமிழகத்தில் உள்ள காங்கிரஸ் தலைவர்களைப் பற்றி இங்கு யாரும் கவலைப்படுவதும் இல்லை. தாங்கள் பிறந்த மண்ணிலேயே தனித்துக் களம் கண்டு வெல்லக்கூடிய வல்லமை இவர்களுக்கு இல்லை என்பதை முதலில் நீங்கள் அறிந்துகொள்வது அவசியம். இவர்கள் அனைவரும் இளைஞர் காங்கிரஸ் தேர்தலில் வேட்பாளர்கள் செலவழித்த பணம் எவ்வளவு என்று தெரிந்தால் உங்களுக்கே மயக்கம் வரும். இவர்களா காமராஜ்



ஆட்சியை அமைக்கப்போகின்றனர்?

அன்பிற்கினிய ராகுல்... தமிழக மக்கள் காங்கிரஸுக்கு ஏன் வாக்களிக்க வேண்டும். ஈழத்தில் எம் இன மக்கள் கொன்று குவிக்கப்பட்டபோது, இங்கு உள்ள காங்கிரஸ் தலைவர்கள் போர் நிறுத்தம் வேண்டி மத்திய அரசை நிர்ப்பந்தித்தவர்களா? தமிழக மீனவர்கள் அன்றாடம் சிங்களவரால் கடலில் சுட்டுக் கொல்லப்பட்டபோது, இலங்கை அரசின் தூதரகம் முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தி, தங்கள் எதிர்ப்பைக் காங்கிரஸ் தலைமைக்குத் தெரிவித்தவர்களா? ஸ்பெக்ட்ரம் ஊழல் நாயகர்களின் உறவை உதறிவிட்டு, நேர்மை சார்ந்த நல்லரசியலுக்கு அடித்தளம் அமைத்தவர்களா? மணற்கொள்ளை யையும், அரிசிக் கடத்தலையும் தடுத்து நிறுத்தப் போராடியவர்களா? 'திருமங்கலம்பாணி' தேர்தல் முறை கேடுகளுக்கு உடந்தையாக நிற்காமல் ஜனநாயக மரபுகளைக் காக்க முனைப்புடன் முயன்றவர்களா? உயர் நீதிமன் றத்தில் தமிழ் உலா வருவதற்கு மத்திய அரசின் மனதை மாற்றியவர்களா? ஒரு சிறுபான்மை அரசு தன்னிச்சையாகக் கடை விரித்த ஊழல் நட வடிக்கைகளைக் கடுமையாக விமர்சித்து, அதை நெறிப்படுத்தும் வழி வகைகளைக் கண்டெடுத்து, சட்ட மன்றத்தில் சங்கநாதம் செய்தவர்களா? இனப்பற்றும், மொழிப்பற்றும் சமூகச் சிந்தனையும் சிறிதும் அற்ற இவர்களுக்கு ஏன் வாக்களிக்க வேண்டும்?

'காமராஜர் ஆட்சி அமைப்போம்' என்று கள்ளக் குரல் கொடுக்கும் இவர்கள் கொஞ்சமும் சமூகக் கூச்சமும் இன்றி 63 தொகுதிகளைப் போராடிப் பெற்று, ஸ்பெக்ட்ரம் நாயகர்களுடன் தேர்தல் களத்தில் கைகோர்த்து நிற்பது எவ்வளவு பெரிய கொடுமை!

இந்த ஆட்சியைப் பயன்படுத்திப் புதிய கோடீஸ்வரர்களாகிவிட்ட காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் களுக்கும் காமராஜருக்கும் என்ன சம்பந்தம்? தி.மு.க.வுக்குத் தொண்டூழியம் செய்வதே சமூகசேவை என்று கருதும் சில காங்கிரஸ் தலைவர்களின் சுயலாபத்துக்காக கொடி பிடிக்கும் தொண்டர்கள் தொடர்ந்து நட்டப்படுவது தான் பரிதாபகரமானது!

இந்தியாவில் உள்ள 110 கோடி மக்களில் காங்கிரஸின் தலைமை யேற்கவும், நாட்டின் விதி எழுதவும் நேரு குடும்பத்தை விட்டால் கதிமோட்சம் இல்லை என்பதைவிட அதிக பட்ச அவமானம் இந்த மண்ணுக்கு வேறு ஏது? மோதிலால் நேரு ஆனந்த பவனத்தை நாட்டுக்குக் கொடுத்தது உண்மைதான். ஆனால், ஒரு வீட்டை கொடுத்துவிட்டு நாட்டையே நேருவின் வாரிசுகள் சொந்தமாக்கிக்கொண்டது எந்த வகையில் நியாயம் ராகுல்?


'நீங்கள் செய்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்ப்புப் பெறுவீர்கள். அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்' என்பது கர்த்தர் இயேசுவின் திருமொழி!

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் சுய மதிப்பீடு செய்வதன் மூலம் தமது தனித்துவத்தை வெளிப்படுத்த முடியும்

## யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

மாணவர்கள் தங்களைப் பற்றி சுய மதிப்பீடு செய்து கொள்வதன் மூலம் தமது தனித்துவத்தை வெளிப்படுத்த முடியும் என யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன் தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக இந்து மன்றத்தினால் இந்துநெறி இதழ் வெளியீடு நேற்று முன்தினம் பல்கலைக்கழக பொருளியல் பீடத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்கலைக்கழக மாணவர்கள் ஏனைய மாணவர்களுக்கு முன்னுதாரணமானவர்களாக இருத்தல் வேண்டும். எந்த நிகழ்வுகளானாலும் முன்னின்று நடத்த அதில் பங்கேற்க ஆர்வம் காட்ட வேண்டும். அதன் மூலம் உங்கள் ஆளுமையை விருத்தி செய்து கொள்ளலாம்.

மேலும் இந்து கலாசாரத்தையும் இந்து சமயத்தையும் வளர்த்தெடுக்கும் நோக்குடன் கருத்தரங்குகள் நடாத்தப்பட வேண்டும். அதில் வெளிநாடுகளில் உள்ள இந்து அமைப்புக்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறான கருத்தரங்குகள் மூலம் இந்து நெறியை வளர்த்தெடுக்க முடியும் என தெரிவித்தார்.

அத்தோடு நல்ல செயல்களை செய்ய முற்படும்போது பல இடர்பாடுகள் ஏற்படுவது வழமை. அதற்காக அதை நடைமுறைப்படுத்தாது விடக்கூடாது.

யாழ். பல்கலைக்கழகத்தை பொறுத்த வரை இந்து நாகரிகம் ஆரம்பித்த காலம் தொடக்கம் இற்றைவரை முதன்மையான துறையாக விளங்குகிறது.

பல்கலைக்கழகத்தின் உயிர் நாடியாக விளங்குபவர்கள் மாணவர்கள். ஒன்றுபட்டு ஒற்றுமையாக செயற்படுவதன் மூலம் எந்தத் துறையையும் வளர்த்தெடுக்க முடியும்.

அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு ஓரிரு நிகழ்வுகள் நடாத்திய பின்பு அவை இடைநிறுத்தப்படக் கூடாது. தொடர்ந்து செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2-6)

# ஜப்பான் அணு ஆலை வெடிவிபத்தால் இலங்கைக்குப் பாதிப்பில்லை

## வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவிப்பு

ஜப்பானில் அணு ஆலை வெடிவிபத்துச் சம்பவத்தினால் இலங்கைக்கு பாதிப்பு எதுவும் கிடையாது என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. இரண்டு நாடுகளுக்கும் இடையிலான தூரம் மற்றும் ஜப்பானிலிருந்து வீசும் காற்று பொதுவாக கிழக்கு நோக்கியே பயணிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அணு ஆலை வெடிவிபத்தினால் ஏற்படக்கூடிய கதிர்கள் இலங்கை வான் பரப்பை அடைவதற்கான சாத்தியமில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை புகுஷிமா அணு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தினால் கதிரியக்க பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக சர்வதேச அணு ஆய்வு மையம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஸ்ரீ-2)

# தேசிய இயற்கை விருதுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

''இலங்கையை நோக்கிய சுத்தமான இயற்கை'' எனும் தொனிப்பொருளில் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தேசிய இயற்கை விருது - 2011 க்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

சுற்றாடலின் ஊழல் நிர்வா கம், வளம் மற்றும் கழிவு முகாமைத்துவம், சுத்தமான உற்பத்தி போன்ற விடயங்களை முன்னிறுத்தி அபிவிருத்தியை மையப்ப டுத்தும் உண்மையான உரிமை யாளர்களுக்கு கீரிடம் சூட்டும் நோக்கிலேயே இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப் படவிருக் கிறது.

இதற்காக இரசாயன மருந்து மற்றும் பெற்றோலியப் பொருட்கள் உற்பத்தி, துணிவகை உற்பத்தி, உணவு மற்றும் பானங் கள், அகழ்வு மற்றும் எரிபொருட் கள் சுத்தம் , ஹோட்டல், வாகன சேவை நிலையங்கள், கழிவு முகாமைத்துவம் மற்றும் மீள் சுழற்சி, இறப்பர் பொருட்கள் உற்பத்தி, சுகாதார சேவைகள் உள்ளிட்ட விடயங்களுக்கு உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பாடசாலைகளிலிருந்து விண்ணப்பங்களை அனுப்பி வைக் கலாம்.

விண்ணப்பங்களை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிரதான காரியாலயம் மாகாண காரியாலயங்கள் மற்றும் மாவட்ட காரியாலயங்களிலும் (Munasinghe @ cea.lk, Samantha@ cea.lk என்ற மின்னஞ்சலூடாகவும் www.cea.lk என்ற இணையத்தின் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் அதற் குரிய விபரங்களுடன் தபாலுறையின் இடது பக்க மேல்மூலையில் ''இயற்கை விருது - 2011'' என்று குறிப்பிட்டு எதிர் வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், தெரிவுக்குழு, இயற்கை விருது - 2011 மத்திய சுற்றாடல் அதிகாரசபை, டென்சில் கொப்பேகடுவமாவத்தை , பத்தரமுல்லை எனும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும். விருது வழங்கும் வைபவம் உலக சுற்றாடல் தினமான எதிர்வரும் யூன் 5 ஆம் திகதி வழங்கப்படுவதுடன் இவை தொடர்பிலான மேலதிக விபரங்களை 011-287 3 452 அல்லது 011 - 28672 62 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். (ஸ்ரீ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### கோரை

**Botanical Name - Cyperus rotundus**
**Family - Cyperaceae**
**Engl- Nut grass**
**Sinh- Kalanduru**

இதுவொரு ஓராண்டுச் செடியாகும். உருளை வடிவ முடிச்சுக்களையுடைய சிறிய நீண்ட வேர்த் தொகுதி கொண்டது. 0.8 - 2.5 செ.மீ விட்டமுடையது. நார் வேர்கள் வேர்ச் சுணைகளால் மூடப்பட்டிருக்கும். 15-60 செ.மீ நீளமும் 0.8 செ.மீ. அகலமுமான மெல்லிய தண்டினைக் கொண்டிருக்கும்.

இலைகள் மெல்லியவையாகவும் இரு முனைகளும் ஒடுங்கிக் காணப்படும். வெளிறிய மண்ணிற்ப் பூக்கள் பூந்துணராக 10-20 வரை காணப்படும். இருபாலானவை. கோள வடிவ பழங்கள் கறுப்பாக காணப்படும். வருடம் முழுவதும் பூக்களைக் காணலாம்.


**இனவிருத்தியும், பரம்பலும்:**

வெப்பப் பிரதேசங்களில் வயல்கள், தோட்டங்களில் களைப்பயிராகக் காணப்படும். விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம். மருத்துவத்தில் இதன் பயன்கள் அதிகம்.

**மருத்துவப் பயன்கள்:**

✦ கோரைப்புல் குடிநீர்- நுரையீரல் சம்பந்தப்பட்ட ஆஸ்துமா, காச நோய்களைக் கட்டுப்படுத்தும். இதன் வேரை கோரைக் கிழங்கு என அழைப்பர். இது மருந்துப் பொருளாக மட்டுமன்றி , ஊதுவர்த்தி போன்ற நறுமணப் பொருட்கள் செய்யவும் பயன்படுகின்றது.

✦ இரண்டு பச்சை கோரைக்கிழங்கை எடுத்து நசுக்கி 120 மில்லி நீரில் இட்டு அரைவாசியாக சுண்டக்காய்ச்சி இந்தக் குடிநீரை வேளைக்கு 30 மி.லீற்றர் வீதம் இருவேளை 40 நாட்கள் அருந்தி வர வயிற்றுப் புண், வயிற்றுவலி ஆகியவை குணமாகும்.



✦ பச்சை கோரைக்கிழங்கை எடுத்து நன்கு கழுவி சுத்தம் செய்து அரைத்து மார்பில் பற்றிட தாய்ப்பால் கூடுதலாக சுரக்கும். மேற்படி கோழைக்கிழங்கை அரை த்த விழுதை உடம்பில் பூசி வந்தாலும் வியர்வை நாற்றம் விலகும்.

✦ ஒரு கோரைக் கிழங்கை எடுத்து நன்கு சுத்தம் செய்து கொள்ள வேண்டும். அத்துடன் ஒரு துண்டு இஞ்சியை எடுத்துத் தோலை நீக்கி கொள்ள வேண்டும். இரண்டையும் சேர்த்து நன்கு இடித்துப் பின் சிறிது தேன்விட்டு அரைத்துக் கொள்ள வேண்டும். காலையில் இதனை சுண்டைக்காய் அளவு எடுத்து வெறும் வயிற்றில் சாப்பிட குடல் கிருமிகள் அனைத்தும் அகன்று விடும்.

✦ சம அளவு கோரைக் கிழங்கு, வில்வம் இவைகளை பனை வெல்லத்துடன் கலந்து உணவுக்குப் பின் இரவு மட்டும் உட்கொண்டு வந்தால் இரத்தப் போக்கு தீரும்.

✦ கோரைக்கிழங்குவெட்டிவேர் , சந்த னம், இலாமிச்சவேர் , சுக்கு இவற்றை சம எடை கொண்டு ஒரு லீற்றர் தண்ணீரில் 1/8 பங்காக கசாயம் செய்யவும். இவ்வாறு தினமும் 3 நாட்கள் காலையில் உணவுக்கு முன் உட்கொண்டு வந்தால் பித்தம் சம்பந்தமான நோய்கள் தீரும்.

✦ நன்னாரிவேர், கோரைக் கிழங்கு இலாமிச்சவேர், நிலப்பனற் கிழங்கு வெட்டி வேர், சந்தனம், சீந்தில் இலைகளை சம எடை எடுத்துக் கொண்டு ஒரு மேசைக்கரண்டி தேனில் தண்ணீரும் கூட்டிக் கசாயம் செய்து வைக்கவும். இக்கசாயத்தில் ஒரு மேசைக்கரண்டி சிறிது தேன் சேர்த்துக் கொடுக்க கர்ப்பம் தரித்துள்ள பெண்களுக்கு ஏற்படும் சகல விதமான சுரங்களும் தீரும்.

✦ கோரை கிழங்கு பசுவின் வெண்ணெய், சக்கரை, நெற்பொரி, திராட்சைவற்றல் இவற்றை சம அளவு எடுத்து பொடி செய்து வைக்கவும் . பசு நெய்யுடன் கலந்து தினமும் காலை, மாலை இரு வேளை 5 கிராம் அளவு கொடுத்துவந்தால் இரத்தம் சுத்தமடைந்து உடல்பலம்பெறும்.

✦ கோரைக் கிழங்கு, விஷ்ணு கிராந்தி, மிளகு ஒவ்வொன்றும் 60 கிராம் அளவு வீதம் எடுத்து ஒன்று இரண்டாய் இடித்து 2 லீற்றர் தண்ணீரில் கலந்து பின் அடுப்பிலேற்றி வைத்து எரித்து ஒரு லீற்றர் குடிநீராக இறக்கி ஒரு வேளைக்கு 60 மில்லி வீதம் 8 நாட்கள் சாப்பிட விந்து வீழ்தல் உடனே நின்று விடும்.

✦ கோரைக் கிழங்குகளை சேகரித்து நன்கு கழுவி நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து வைத்துக் கொள்ளவும். தினமும் 2 கிராம் அளவு காலை , மாலை நெய்யில் உட்கொண்டுவர காசநோய் தீரும்.

✦ இதில் பெரும் கோரை எனும் ஓர் இனமும் உண்டு. இப் பெருங்கோரையின் புற்களால் தயாரிக்கப்பட்ட **கோரைப் பாய்** இதில் படுத்துத் தூங்கினால் உடலுக்கு குளிர்ச்சியைத் தருவதுடன் காய்ச்சல் வெட்கையையும் தணிக்கும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளிக்காட்டு இதிகாசம்

65



கவிப்பேரரசு வைரமுத்து

கரட்டுக் காட்டுல செல்லத்தாயி அழுது பங்கு கேட்டுக்கிட்டிருந்தான்னா வீட்டுக்குள்ள நொழைஞ்சு அடிச்சுப் பங்கு கேட்டுக்கிட்டிருந்தான் சின்னு.

தண்ணிப் பானையைக் கவுத்து விட்டான்; தகரச்சட்டியை உருட்டி விட்டான். வேல்கம்பெடுத்துப் பொரட்டிப் புடிச்சுக்கிட்டு சருவச்சட்டி மண் பானையெல்லாம் சகட்டு மேனிக்கு அடிச்சு நொறுக்குறான். வேட்டிய மடிச்சுக் கட்டிக்கிட்டுக் கூரையை இழுத்துத் தரையில போட, விட்டத்தப் புடிச்சுத் தொங்குறான். கோழி அடைய வாசல்ல வச்சிருந்த பழைய சால எட்டி ஒதைச்சு எங்கெங்கயோ உருட்டி விடுறான்.

"எனக்கும் காரை வீடு கட்டிக் குடுத்திருந்தா தொள்ளாயிரம் ரூவா கிடைச்சிருக்குமில்ல. கூரை வீடு கட்டிக் குடுத்து கொண்டுபுட்டானே பேயத்தேவன். ஏய் முருகாயி! ஏய் மின்னலு... புருசன செயிலுக்கனுப்பிப் புள்ளையக் கொன்னவளே! சொல்லுங்கடி பேயத்தேவங்கிட்ட... சர்க்காரு குடுக்கிற நஷ்டஈட்ல சரிபாதி எனக்குத் தரலேன்னா அவனக் குத்திக் குடல உருவி மால போட்டுக்கிட்டு மலையில ஏறி ஒளிஞ்சுக்கிருவேன். சொல்லிவைங்க கெழட்டுப்பயகிட்ட, நான் கேட்டது கெடைக்கல - நாறிப் போயிரும் நாறி."

சத்தத்தையும் தண்ணியடிச்ச வாசனையையும் வீட்டுக்குள்ளேயே விட்டுட்டு, நொறுங்கித் தாறுமாறாக் கெடந்த பொருள்கள்மேல சாராயம் குடிச்ச சல்லிக்கட்டுக்காள மாதிரி நடந்து போனான் சின்னு.

இப்படி வராத காசுக்குப் பேயத்தேவர் குடும்பம் வரிஞ்சுகட்டி நிக்கிறப்ப தாசில்தார் ஆபிசில கதை கந்தலாகிக்கிட்டிருந்துச்சு.

கரட்டுக்காட்ல பேயத்தேவர் பரம்பரையா உழுகிற பத்து ஏக்கர்ல நாலு ஏக்கர்தான் - பட்டாக்காடாம்; ஆறு ஏக்கர் பொறம்போக்குன்னு பட்டயம் சொல்லுதாம். பட்டா நெலத்துக்கு மட்டும்தான் நஷ்ட ஈடாம்; பொறம்போக்குக் கெடையாதுன்னு சட்டமாம்.

பசுவுக்கு வில சொன்னா - காம்புக்கு மட்டும்தான் காசு - பசுவுக்கு இல்லேங்கிற கதையாப் போச்சு.

"இதனால் சகலமான பெரியவுகளுக்கும் தெரிவிப்பது என்னான்னா சர்க்கார் கட்டிக்கிட்டிருக்கிற வைகை அணைக்கட்டு இன்னும் அஞ்சு மாசத்துல கட்டி முடிஞ்சு ஆறாம் மாசம் தண்ணி தேங்கப் போறதால நம்ம கள்ளிக்காட்டு சாராங்கத்துக்குப் பாத்தியப்பட்ட பன்னண்டு ஊர் ஆளுகளும் அடையாள அத்தாட்சிப் பத்திரத்தைக் காட்டி பெரியகுளம் தாசில்தார் ஆபிஸ்ல நஷ்டஈடு வாங்கிக்கொள்ள வேண்டியது. அடுத்த ஆறாவது மாசத்துல தண்ணி வாரது இன்ன நேரம்ன்னு இல்லேங்கிறதனால உடனடியாகக் 'காலி பண்ண வேண்டியது. இது சர்க்கார் உத்தரவு! சர்க்கார் உத்தரவு! சர்க்கார் உத்தரவு!"

டணக்கு டணக்கு டணக்குன்னு தண்டோரா போட்டு ஊர் ஊரா சாட்டிட்டுப் போனான் தண்டல்காரன்.

பன்னண்டு ஊருகள்ல முதல்ல பயந்தது மூணு ஊருக. அணகட்ற எடத்த ஒட்டி - பள்ளக்கால்ல இருந்ததனால சாவடிப்பட்டி, பசுக்காரன்பட்டி, சொக்கனூரு மூணு ஊர்களும் சாட்டி முடிச்ச தேதியிலயிருந்து ஒருநாளும் ஒறங்கல. தண்ணி பெருகுனா முதல்ல மொழுக்குன்னு முழுங்கப் போறது இந்த மூணு ஊர்களையுந்தான். "ஒண்ணு - சர்க்கார் கூட சண்டை புடிக்கணும்; இல்லாட்டி - தண்ணிக்குள்ளேயே கெடக்கணும். ரெண்டுமே நடக்கிற காரியமில்ல. பெறந்த வீடு, வளந்த தெருவு, ஒழைச்ச காடு, பொழைச்ச பூமி இதெல்லாம் நம்மளப் போகவிடுமா இன்னொரு காடு தேடிப் பொழைக்க முடியுமான்னு ஊரே மருகி நின்னப்ப சாவடிப்பட்டி தவசித்தேவரு ஊருக்கே ஒரு நல்ல சொல்லு சொன்னாரு."

"யப்பா அண கட்டாம இருக்க முடியுமா? காடைக்கூடு அழியுதேன்னு கருதறுக்காம இருக்க முடியுமா? இந்தப் பூமியில எந்த மனுசக் கூட்டமும் ஒரே எடத்துல பொழைச்ச கூட்டமில்லப்பா. தண்ணி தேடி, தான்யம் வெளயிற எடம் தேடி, வெட்ட வெளி தேடி, வேட்டக்காடு தேடி இடம்மாறி இடம்மாறி அலைஞ்சவன்தானப்பா மனுசப்பய. பத்துப் பதினைஞ்சு தலைமொறைக்கு முன்னால இந்தப் பூமியில பஞ்சம் பொழைக்க வந்தவங்கதானப்பா நாமெல்லாம். பூர்வீகமா எந்த பூமி, நம்ம சொந்த பூமின்னு தெரியல. ஒருவேள இப்ப நாம போயிப் பொழைக்கப் போற பூமியே நம்ம பூர்வீக பூமியாக் கூட இருக்கலாமில்ல... புறப்படுங்கப்பா."

தவசித்தேவர் வாக்க தெய்வவாக்கா நெனைச்சு ஊரே அவர அழுதுகிட்டே கும்புட்டுச்சு.

அணைக்குத் தண்ணி வர இன்னும் மூணு மாசந்தான் இருக்கு. முதல்ல வெளியேறினவுக சாவடிப்பட்டி ஆளுகதான். பிறந்த எடம் பாத்து, நடந்த தடம் பாத்து, 'மண்ணுதான் மனுசங்களப் பொதைக்கும்; நாங்க மண்ணையே புதைச்சிட்டுப் போறோமே'ன்னு 'ஓ'ன்னு ஒப்புச் சொல்லி அழுது புலம்பி அண்டா குண்டா தூக்கி, அருவாமணை தூக்கி, சட்டிபொட்டி தூக்கி, ஆடுமாடு கையில புடிச்சுக் கலங்கிக் கதறிக்கிட்டே சுதந்திர இந்தியாவுல அகதிகளாப் புறப்பட்டுப் போறாக சாவடிப் பட்டி ஆளுக.

பாவம்! ஆணும் பொண்ணும் நண்டானும் சுண்டானும் தீப்புடிச்ச காட்ல பறவைக வெளியேர்ற மாதிரி வெளியேறுதுக. தட்டுமுட்டுச் சாமானையெல்லாம் ஒரு இத்த சாக்குல கட்டி மண்டமயிர் கழிஞ்ச தலையில தூக்கிச் சொமந்து சொமை முன்னுக்கிழுக்க கூனு பின்னுக்கிழுக்க நடந்து போகுது ஒரு பெரிசு. பெரிசுக்குப் பின்னால ஒரு வெள்ளாட்டங்குட்டி போகுது; வெள்ளாட்டங்குட்டியப் புடிச்சுக் கெழவி போறா. அந்தக் கெழவன் சேத்துவச்ச செல்வமெல்லாம் அம்புட்டுத்தான்; அந்த தட்டுமுட்டுச் சாமானும் வெள்ளாட்டங்குட்டியும் கெழவியும்தான். கெழவன் எம்பது வருசம் பொழைச்ச பொழைப்புல மிச்சம் - குடியிருந்த குச்சு வீட்டுக்கு நஷ்ட ஈடாக் குடுத்த மூணு நூறு ரூவாத்தாளுகதான். கெழவியோட சுருக்குப் பையில காஞ்சு போன சுண்ணாம்புக்கும் கசங்கிப் போன வெத்திலைக்கும் மத்தியில கெடக்குது அந்த முந்நூறு ரூவா. அதுதான் அவுக ஆயுசில பாத்த பெரிய ஆஸ்தி.

"கத்தாழங்காடே போயிட்டு வாரோம்! கள்ளிச் செடிகளா போயிட்டு வாரோம்! காடைகதுவாலிகளா போயிட்டு வாரோம்! கம்மாக்கரையே போயிட்டு வாரோம்! கரிசத்தரிசே போயிட்டுவாரோம்! சொந்த வீடே போயிட்டு வரோம்! சுடுகாடே போயிட்டு வாரோம்!" - மனசுக்குள்ள சொல்லி வாய்க் குள்ளேயே அழுகிறாக. கடைசியில ஞாபகத் துக்கு வருது. "போயிட்டு எங்க வாரது? போறோம்!"

போறோம்! எங்க போறோம்னு தெரியலையே. பாப்பம். போய்ப் பாப்பம்! பூமி என்னா முடிஞ்சா போயிரும்? போய்க்கிட்டேயிருப்போம். நெழல் கண்ட இடம் நிப்போம். கையில்லாத குருவி கூடுகட்டிக் குடியிருக்கிறதில்லயா? கையுங்காலும் உள்ள நமக்கு வீடு கட்ட முடியாதா?

நடந்துபோகுது பாவம் நாதியத்த கூட்டம்- கொஞ்ச சொத்துக்களைத் தலையிலயும் நெறய நம்பிக்கையை நெஞ்சுலயும் சுமந்து.

சக்கரபட்டி ஆளுக ஒண்ணாக்கூடி ஒரு முடிவெடுத்தாக.

"யப்பா வெட்டிக்கிட்டாலும் குத்திக்கிட்டாலும் நாமெல்லாம் ஒரே மண்ணுல பொறந்து ஒண்ணா வளந்தவுக. நம்ம ஆளுக சிந்தவேணாம்; சிதறவேணாம்; இந்த மண்ணவிட்டு எந்த மண்ணுக்குப் போனாலும் ஒண்ணாவே போவோம்; ஒண்ணாவே இருப்போம். பொழைச்சா எல்லாரும் ஒண்ணாப் பொழைப்போம்; செத்தா எல்லாரும் ஒண்ணாச் சாவோம்."

(வளரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசநோய் சமூக அணுகுமுறை

07



Dr.சி.யமுனானந்தா, MBBS,DTCD
மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி,
மார்புநோய் சிகிச்சை நிலையம்,
பண்ணை,யாழ்ப்பாணம்.

## காசநோயும் எயிட்ஸ் நோயும்

உடலில் நோய் எதிர்ப்புத்தன்மை குறைந்த நிலையில் முதலில் ஏற்படும் நோய் காசநோயாகும். எயிட்ஸ் நோயாளிகளுக்கு காசநோய் ஏற்படும் போது காசநோய்க்கு முதலில் சிகிச்சை அளித்தல் வேண்டும்.

HIV தொற்று ஏற்பட்டவர்களில் 21-27 வீதம் காசநோய் சார்பு அபாயநிலை உள்ளது. உலகில் காசநோயாளிகளில் 19 வீதம் எயிட்ஸ் நோயாளிகளாவார்கள். காசநோயாளிகளில் குருதிப் பரிசோதனைமூலம் HIV தொற்று இல்லை என்பதனை உறுதிப்படுத்தலாம். எயிட்ஸ் நோயாளிகளில் 50 வீதமானோர் காசநோயினாலேயே இறக்கின்றனர்.

## முதியவர்களில் காசநோய்

முதியோரில் காசநோய் அறிகுறிகளை இனம்காணல்

இன்று முதியவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. போர் சம்பந்தமான பிரச்சினைகளில் ஒன்றாக சனத்தொகையில் முதியவர்களின் எண்ணிக்கை அதிகரித்து இளம் வயதினரின் எண்ணிக்கை பல்வேறு காரணங்களினால் குறைந்து காணப்படுகின்றது.

எமது பிரதேசத்தினைப் பொறுத்தவரையில் முதியவர்களுக்கான சமூக, சுகாதார சேவைகள் அவர்களின் அடிப்படைத் தேவைகளைத்தானும் பூர்த்தி செய்யக்கூடிய அளவில் இல்லை. இவ்வாறான நிலையில் முதியவர்களில் கவனம் செலுத்துதல் அவசியமானதாகும்.

2050 இல் காசநோய் அற்ற உலகம் என்ற இலக்கை நோக்கி உலக சுகாதார நிறுவனம் செயற்படுகின்றது. நாம் இதனை அடைவதற்கு பல்வேறு தரப்பினரையும் காசநோயிலிருந்து பாதுகாப்பதுடன் காசநோய் உள்ளவர்களைச் சரியாக இனம் கண்டு அவர்களுக்கு உகந்த சிகிச்சை அளித்தல் வேண்டும்.

எனவே, நாம் முதியவர்களுக்கான காசநோய் சம்பந்தமான சேவைகளை விருத்தி செய்தல் அவசியமானதாகும்.முதியவர்களின் காசநோய் இனம் காணப்படல் குறைவாக உள்ளது. காசநோய் கட்டுப்பாட்டில் முதியவர்களின் சுவாச ஆரோக்கியத்தினைப் பேணுவது மிகவும் இன்றியமையாதது. தொடர்ச்சியாக 2 கிழமைகளுக்கு மேல் இருமல் இருப்பின் சளிப்பரிசோதனை செய்யப்படலின் அவசியத்தை முதியவர்களைப் பராமரிப்பவர்கள் உணர்தல் வேண்டும்.

காசநோய்க்கு சிகிச்சை எடுப்பதால் குடும்பத்தில் ஏனைய அங்கத்தவர்களுக்கும் அயலவர்களுக்கும் குறிப்பாக சிறுபிள்ளைகளுக்கும் தொற்று ஏற்படுவதனைத் தவிர்க்கலாம்.

முதியவர்கள் சளிப்பரிசோதனைக்கு உட்படாமைக்கு காரணங்களும் தீர்வும்

+ உடற்பலவீனம், நடமாடமுடியாமை, வைத்தியசாலைக்கு கூட்டிச்செல்ல உதவியின்மை இதற்கு நாம் உதவ வேண்டும்.

+ முதியவர்கள் வீட்டில் சிறு பிள்ளைகளைப் பராமரித்தல், வேலை செய்தல், வைத்தியசாலைக்குச் செல்ல நேரம் இன்மை அதனை நாம் நீக்கல் வேண்டும்.

+ முதியவர்களில் காணப்படும் ஏனைய சுவாச நோய்களினால் காசநோய் பற்றி கவனம் செலுத்தாமை. எனவே, முதியவர்களில் இருமல் காணப்படின் சளிப்பரிசோதனை அவசியம்.

+ முதியவர்கள் இருமல் ஏற்படின் நாட்டு வைத்தியம், கை மருந்து என்பவற்றை நாடுவர். இதனை மாற்றியமைக்க வேண்டும்.

+ முதியவர்களை பராமரிக்கும் குடும்பத்தின் ஆதரவு குறைவு, முதியவர்களை அவர்களது உறவினர், அயலவர்கள் வைத்தியசாலைக்கு கூட்டிச்செல்ல உதவ வேண்டும்.

+ குடும்ப அங்கத்தவர்கள் சமூக வடுவெனச் சளிப்பரிசோதனையை வயதானவர்களுக்கு செய்ய விரும்புவதில்லை. அதனை நாம் மாற்றியமைக்க வேண்டும்.

+ முதியவர்களுக்கு மருத்துவ வசதியில் முக்கியத்துவம் கொடுக்காமை. அதனை நாம் மாற்றியமைக்க வேண்டும்.

## மருந்திற்கு எதிர்ப்புத் தன்மை உடைய காசநோய்

பல்வகை மருந்திற்கு எதிர்ப்புத் தன்மை உடைய காசநோய் ஏற்படக்கூடியவர்கள்

1. மருந்துகளை இடையில் கைவிட்டோர்.
2. சிகிச்சை அளிக்கப்பட்டு குணமளிக்கத் தவறியவர்கள்.
3. நீண்டநாள் நோயாளிகள்
4. மீளவும் காசநோய் உருவாகியவர்கள்.
5.சளியில் கிருமிகள் 2 மாதங்கள் சிகிச்சையின் பின்பும் காணப்படுபவர்கள்.
6. காசநோய் மருந்துகளை ஒழுங்காகப் பாவிக்காதோர்.
7. நுரையீரல் மிகவும் கடுமையாகக் காசநோய்க்கிருமியினால் பாதிக்கப்பட்டோர்.

மருந்திற்கு எதிர்ப்புத் தன்மையுடைய காசநோய்க்கிருமிகள் உருவாகுதல்.

1. எழுந்தமானமாக, காசநோய்க்கிருமிகள் விகாரமடைந்து யாதாயினும் மருந்திற்கு எதிர்ப்புத்தன்மையுடையதாக அமையலாம்.

Rifambicin இற்கு $10^{-8}$ நிகழ்தகவும் 1 sonicizid இற்கு $10^{-7}$ நிகழ்தகவு.

2. இயற்கையான எதிர்ப்பு

குறித்தவகைக் காசநோய்க்கிருமிகள் குறிப்பிட்ட மருந்திற்கு அழிக்கப்பட முடியாத தன்மை உடையதாக அமைதல்.

3.கலப்பு எதிர்ப்பு

ஒருவகைமருந்திற்குஎதிர்ப்புஉருவாகின்றபோது அதே குடும்பத்தினைச் சேர்ந்த ஏனைய மருந்துகளுக்கும் எதிர்ப்பு உருவாகுதல்.

4. பெற்ற எதிர்ப்புத் தன்மை

ஒரு மாதத்திற்கு மேல் மருந்துகளை ஒரு நோயாளி பெற்ற நிலையில் அங்கு மருந்திற்கு எதிர்ப்புத் தன்மை உருவாதல்.

5. ஆரம்பநிலை எதிர்ப்பு

நோயாளிகள் முன்னர் காசநோய் மருந்துகளை உபயோகிக்காதவிடத்து மருந்திற்கு எதிர்ப்புத் தன்மை உடைய கிருமிகள் தொற்றுதல் அடைதல்.

(தொடரும்)

# இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது

(கொழும்பு)

இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டு பெப்ரவரியை விட இவ்வாண்டு பெப்ரவரியில் 14.8 வீதத்தால் அதிகரித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 65 ஆயிரத்து 797 ஆகும். எவ்வாறாயினும் பிரிட்டன் மற்றும் ஜேர்மனியில் இருந்து வருபவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. கடந்த 30 ஆண்டு கால யுத்தம் முடிவுக்கு வந்த பின் 2009 இல் 6 இலட்சத்து 54 ஆயிரத்து 476 உல்லாசப் பயணிகள் இலங்கை வந்திருந்தனர்.

இது அதற்கு முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகைய்யில் 46 வீதம் அதிகரிப்பாகும். இந்தக் காலப் பகுதியில் மாதாந்தம் சராசரியாக 30 தொடக்கம் 40 வீத அதிகரிப்பு காணப்பட்டது. பிரான்ஸ், நெதர்லாந்து, பிரிட்டன் , ஜேர்மனி ஆகிய நாடுகளில் இருந்து பயணிகள் தற்போது இலங்கைக்கு அதிக விஜயம் செய்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# பொதுக்கூட்டம்

வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தின் மகா சபைப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தலைவர் கா.தர்மகுலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் வருடாந்த மஹோற்சவம் பற்றி ஆராயப்படவுள்ளது. அனைவரையும் தவறாது சமுகம் தருமாறு ஆலய தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-3-48)

# அரசியல் அமைப்பை மாற்றி மீண்டும் பதவி வகிக்க எண்ணியிருக்கவில்லை

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

இலங்கையின் அரசியலமைப்பை மாற்றி மேலும் சில தடவைகள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விரும்பியிருக்கவில்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கொரகொல்லையில் கடந்த 13 ஆம் திகதி இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் உள்ள அனைவருக்கும் தலைவர்களாவதற்கான உரிமையுள்ளது. பண்டார நாயக்க குடும்பத்தினர் மட்டுமே ஆட்சி செய்ய வேண்டுமென நான் ஒரு போதும் நினைக்கவில்லை. நான் ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் கட்சியிலிருந்து 90 வீதிமானவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் 3, 4 தடவைகள் போட்டியிடுமாறு என்னிடம் கோரினர். எனினும் 2 தடவைகள் மாத்திரமே நான் ஜனாதிபதியாக பதவி வகித்தேன். இனி மேல் அரசியலில் ஈடுபடப் போவதில்லை என அப்போது தீர்மானித்ததாலேயே அதன் பின் போட்டியிடவில்லை.

எனது தாய் , தந்தையர் கற்றுத் தந்த அரசியல் மற்றும் ஒழுக்கம் என்பவற்றின் அடிப்படையின் காரணமாகவே மீண்டும் ஒருமுறை பதவி வகிப்பதற்காக அரசியலமைப்பை மாற்ற நான் விரும்பவில்லை. ஆனால் இன்று அர்ப்பணிப்புடன் செயற்படக்கூடிய தலைவர்கள் இல்லாமையே இந்த நாட்டின் குறைபாடாக உள்ளது. பண்டார நாயக்க குடும்பத்தினர் மட்டுமே ஆட்சி செய்ய வேண்டுமென நான் ஒருபோதும் நினைக்கவில்லை. இதன் காரணமாகவே எனது பிள்ளைகளை அரசியலில் ஈடுபட அனுமதிக்கவில்லை என அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)



யாழ். பல்கலைக்கழக இந்து மன்றத்தின் இந்துநெறி இதழ் வெளியீடு நேற்று முன்தினம் பொருளியற்றுறை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீட பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா ஆகியோர் உரையாற்றுவதையும் இதழின் முதற்பிரதியை துணைவேந்தரிடம் இருந்து தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரட்ணம் பெற்றுக் கொள்வதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வலிகாமம் உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.விஜேந்திர சர்மா மங்கல விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி, பாடசாலை அதிபர் த.சண்முகசுந்தரமூர்த்தி ஆகியோர் அருகில் நிற்பதையும் மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையையும் வெற்றி ஈட்டிய மாணவிகள் சான்றிதழ்களுடன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய சட்டம் திருத்தம் செய்யப்படவுள்ளது

(கொழும்பு)

விதவைகள், அநாதைகள் ஓய்வூதியச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்படவுள்ளதாக ஓய்வூதிய திணைக்களம் தெரிவித்துள்ளது.

உயர் செல்வாக்கு மிக்கவரும் அரசாங்க உயர்பதவி வகித்தவருமான ஒருவர், இரண்டு ஓய்வூதியங்களைப் பெற்றுக்கொண்டிருந்தமை கடந்த 2004ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் இவ்வறிவிப்பு வெளியாகியுள்ளது.

அதேவேளை மேற்படி அதிகாரிக்கு உரித்தான ஓய்வூதியத்தை ஓய்வூதியத் திணைக்களம் உடனடியாக நிறுத்தியது. இவர் நேர்மையில்லாத முறையில் பெற்ற இரண்டாவது ஓய்வூதியம் 1,519,274 ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இவருக்கு வழங்கப்பட்ட இந்த மிகை ஓய்வூதியத்தை மீளப்பெறும் வகையில் இவருக்கு உரித்தான ஓய்வூதியத்தின் 50 சதவீதத்தை மாதாந்தம் அறவிட ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம் திலகரத்ன நடவடிக்கை எடுத்தார்.

இதனை எதிர்த்து மேற்படி முன்னாள் அரசாங்க அதிகாரி மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார். இவர் இதை எதிர்த்து உயர்நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கு கடந்த 2008ஆம் ஆண்டு மார்ச் மாதம் தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்நிலையிலேயே விதவைகள், அநாதைகள் ஓய்வூதியச் சட்டத்தை தாம் இறுக்கமாக்கவுள்ளதாகவும் அதன்மூலமே ஏமாற்றுக்காரர்களுக்கு உரிய தண்டனையை வழங்கமுடியும் எனவும் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# ஐ.தே.க. மறுசீரமைப்பு

கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் திட்டமிட்டவாறு நடைபெறும் என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. எதிர்வரும் ஏப்ரல் மாதம் 12ஆம் திகதிக்கு முன்னராக கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய யாப்பின் அடிப்படையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இக்கட்சியின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# விமான ரிக்கெற் விற்பனையில் ஈடுபடும் இராணுவத்தினர்

இராணுவத்தினர் வெளிநாட்டு விமான ரிக்கெற் விற்பனையை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளும் மக்களுக்கு இராணுவத்தினர் ரிக்கெற்றுக்களை விற்பனை செய்யவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இராணுவத்தினரின் பயண முகவர் நிலையம் கொழும்பு-2, கியூ வீதியில் இயங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நியாயமான விலைகளில் விமான ரிக்கெற்றுக்களை விற்பனை செய்வதற்கு இராணுவத்தினர் உத்தேசித்துள்ளாகக் குறிப்பிடப்படுகிறது.

சீனா, சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளுக்கு சுற்றுலாப் பயணங்களையும் ஏற்பாடு செய்துகொடுக்க குறித்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இராணுவ உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் அதிகளவில் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்வதனால் பயண முகவர் நிலையமொன்றை ஆரம்பிக்க வேண்டுமென தீர்மானித்ததாக இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# பதவி மற்றும் தகுதி அடிப்படையில் சட்டத்தை அமுல்படுத்த முடியாது

## சபாநாயகர் தெரிவிப்பு

அனைவருக்கும் ஒரேவிதமான சட்டமே அமுல்படுத்தப்படும் என சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பதவி மற்றும் ஏனைய தகுதிகளின் அடிப்படையில் சட்டத்தை அமுல்படுத்த முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். அம்பாந்தோட்டையில் நடந்த நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களுக்கிடையிலேயே மோதல்கள் இடம்பெற்று வருவதாகவும் தேர்தல் காரணமாக இவ்வாறான மோதல்கள் வெடிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீதியின் முன் அனைவரும் சமனே என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சபாநாயகர் பதவியோ, அமைச்சர் பதவியோ அவர்களைக் காப்பாற்றாது என அவர் தெரிவித்துள்ளார். பொலிஸார் தமது கடமைகளை உரிய முறையில் மேற்கொள்வார்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2011.03 16

- ☆ 597 - பாபிலோனியர்கள் ஜெருசலேமைக் கைப்பற்றினர்.
- ☆ 1190 - சிலுவைப் படையினர் (Crusaders) யோர்க் நகரின் யூதர்களைப் படுகொலை செய்ய ஆரம்பித்தனர். பல யூதர்கள் தற்கொலை செய்து கொண்டனர்.
- ☆ 1521 - மகலன் பிலிப்பைன்சை அடைந்தான்.
- ☆ 1792 - சுவீடன் மன்னன் மூன்றாம் குஸ்டாவ் சுடப்பட்டான். இவன் மார்ச் 29இல் இறந்தான்.
- ☆ 1926 - முதலாவது திரவ - எரிபொருளினால் உந்தும் ஏவுகணையை மசாசுசெட்சில் றொபர்ட் கொடார்ட் என்பவர் செலுத்தினார்.
- ☆ 1939 - பிராக் அரண்மனையில் இருந்து ஹிட்லர் பொஹேமியா, மொராவியாவை ஜேர்மனியின் ஒரு பகுதியாக அறிவித்தார்.
- ☆ 1942 - முதலாவது வி-2 ஏவுகணை ஏவப்பட்டது (ஏவப்பட்ட உடனேயே வெடித்துச் சிதறியது).
- ☆ 1945 - இரண்டாம் உலகப் போர்: இவோ ஜீமா சண்டை முடிவுக்கு வந்தது.
- ☆ 1945 - இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியாவின் 20-நிமிடக் குண்டுவீச்சில் ஜேர்மனியின் வூர்ஸ்பேர்க் நகரின் 90 விழுக்காடு அழிந்தது. 5 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.
- ☆ 1962 - மேற்கு பசுபிக் பெருங்கடலில் அமெரிக்க விமானம் 107 பயணிகளுடன் காணாமல் போனது.
- ☆ 1963 - பாலியில் ஆகூங்க் மலை நெருப்பு கக்கி 11 ஆயிரம் பேர் வரை இறந்தனர்.
- ☆ 1966 - ஜெமினி 8, நாசாவின் 12ஆவது மனிதரைக் கொண்டுசென்ற விண்கலம், ஏவப்பட்டது.
- ☆ 1968 - வியட்நாம் போர்: மை லாய் என்ற இடத்தில் பெண்கள், குழந்தைகள் உட்பட 350 முதல் 500 வரையிலான வியட்நாமியர்கள் அமெரிக்கப் படையினரால் படுகொலை செய்யப்பட்டனர்.
- ☆ 1969 - வெனிசுவேலாவில் உள்ளூர் விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் 155 பேர் கொல்லப்பட்டனர்.
- ☆ 1985 - அசோசியேட்டட் பிரஸ் ஊடகவியலாளர் டெரி ஆன்டர்சன் பெய்ரூட் நகரில் கடத்தப்பட்டார். இவர் பின்னர் டிசம்பர் 4, 1991 இல் விடுதலை ஆனார்.
- ☆ 1988 - ஈராக்கில் குருத்திய நகரான ஹலப்ஜாவில் நச்சுவாயு தாக்குதலில் பல்லாயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டனர்

### பிறப்புகள்

- ☆ 1751 - ஜோர்ஜ் மாடிசன், ஐக்கிய அமெரிக்காவின் 4ஆவது ஜனாதிபதி (இ. 1836)
- ☆ 1789 - கியோர்க் ஓம், ஜேர்மனிய இயற்பியலாளர் (இ. 1854)
- ☆ 1839 - றெனே சளி-புரூடோம், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் (இ. 1907)
- ☆ 1918 - பிரெடெரிக் றெயின்ஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ. 1998)
- ☆ 1929 - இரா.திருமுருகன், தமிழறிஞர்
- ☆ 1953 - ரிச்சர்ட் ஸ்டால்மன், கட்டற்ற மென்பொருள் இயக்கம், க்னூ திட்டம் போன்றவற்றின் தோற்றுவிப்பாளர்.

### இறப்புகள்

- ☆ 1914 - சார்ள்ஸ் கோபட், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1843)
- ☆ 1935 - ஜோன் மாக்லியட், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1876)
- ☆ 1940 - செல்மா லாகர்லோஃப், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் (பி. 1858)
- ☆ 1945 - எம்.ஜே.லெகொக் அடிகளார், அருட்தந்தை (பி. 1880)
- ☆ 1998 - டெரெக் பார்ட்டன், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1918)



2006 - மனித உரிமைகளுக்கான ஐ.நா அமைப்பை உருவாக்குவதற்கு ஐ.நாவின் பொதுச்சபை ஆதரவாக வாக்களித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை என்பது கொடுக்கல், வாங்கலா?

'ஈஷா யோக மையம், கிராமப் புத்துணர்வு இயக்கத்தில் இவ்வளவு மும்முரமாக ஈடுபட்டிருக்கிறதே, உங்களுக்கு ஏதாவது அரசியல் உள்நோக்கம் இருக்கிறதா?' என்று என்னை ஓர் இளைஞர் கேட்டார்.

எனக்கு அந்தக் கேள்வி வேடிக்கையாக இருந்தது. வேதனையாகவும் இருந்தது.

வீட்டுக்குப்போய் உங்கள் தாயிடம் கேளுங்கள்... உங்களை பெற்றெடுத்தபோது பால் கொடுத்தாளே அதற்கு என்ன உள்நோக்கம் என்று? அதே உள்நோக்கம் தான் எனக்கும் என்று அந்த இளைஞரிடம் சொன்னேன்.

அவரைச் சொல்லியும் குற்றமில்லை. ஆதாயம் இல்லாமல் உள்நோக்கம் இல்லாமல் எதையும் செய்யத்தயாராக இல்லாதவர்களால் இந்தச் சமூகம் நிரம்பிவிட்டது. அதனால் யாவற்றையும் சந்தேகத்துடன் பார்ப்பதற்கே சமூகம் பழகிவிட்டது.

வாழ்க்கையை கணத்துக்குக் கணம் முழுமையாக அனுபவித்து வாழ வேண்டுமானால் குறைவற்ற அன்பைச் செலுத்திப்பாருங்கள். மாறாக வாழ்க்கையைக் கொடுக்கல் வாங்கலா மட்டுமே பார்க்க ஆரம்பித்து விட்டீர்கள் என்றால், உங்கள் நிம்மதி தொலைந்துவிடும்!

எல்லாவற்றிலும் உங்களுக்கான ஆதாயத்தை மட்டுமே தேடிக்கொண்டிருந்தால் மனதுக்குள் சாத்தானை அனுமதித்து விட்டீர்கள் என்று அர்த்தம்.

தேவாலயத்தில் ஒவ்வொரு கூட்டத்திலும் அன்பின் மேன்மையைப் பற்றி போதனை செய்யும் ஒரு பாதிரியார், தெருவில் சென்று கொண்டிருந்தார். வழியில் ஒருவர் இரத்த வெள்ளத்தில் துடிப்பதைப் பார்த்தார். பதறிப்போய் அவரைப் புரட்டியவர், திடுக்கிட்டார்.

அங்கே உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தது வேறுயாருமல்ல, கொடிய சாத்தான்!

பாதிரியார் சட்டென்று பின்வாங்கினார். "என்னை எப்படியாவது காப்பாற்றுங்கள்" என்று சாத்தான் மன்றாடியது.

"என்னது உன்னைக் காப்பாற்றுவதா?உன்னை இந்த உலகிலிருந்து விரட்டுவதற்குத்தானே அத்தனை பாதிரியார்களும் ஓயாமல் போராடிக் கொண்டு இருக்கிறோம் "

"பகைவனையும் நேசி என்று தானே உங்கள் யேசு சொல்லியிருக்கிறார்? அதை மறந்துவிட்டீர்களா? "

"சாத்தான் வேதம் ஓதலாம் ஆனால் அதைக்கேட்டு ஏமாற நான் தயாராக இல்லை" என்று பாதிரியார் வேகமாக நடக்க ஆரம்பித்தார்.

எனக்காகச் சொல்லவில்லை, உங்களுக்காகத்தான் சொல்கிறேன். என்னைக் காப்பாற்றவில்லை என்றால், இழப்பு உங்களுக்குத்தான். சாத்தான் என்று ஒன்று இல்லாவிட்டால், கடவுளைத்தேடி யார் வருவார்கள்? "

பாதிரியார் மனதில் போராட்டம் தொடங்கியது.

"யோசியுங்கள் தேவாலயத்துக்கு மக்கள் வருவதை நிறுத்திவிட்டால், உங்கள் பிழைப்பு என்ன ஆகும்?"

அதற்கு மேல் பாதிரியார் தயங்கவில்லை சாத்தானை அள்ளிப் போட்டுக் கொண்டு மருத்துவமனைக்கு விரைந்தார்.

பாதிரியாரைக்கூட மசியவைக்கும் கொடுக்கல்,வாங்கல்தான் சாத்தானின் சாமர்த்தியமான வியாபாரம்!

வாழ்க்கையைக் கொடுக்கல் வாங்கலாக மட்டுமே பார்ப்பீர்களானால், உங்கள் மனதை சாத்தான் வசம் ஒப்படைத்து விடுவீர்கள் என்று அர்த்தம். அப்புறம் உள்ளும் வெளியும் நரகம் தான். போராட்டம்தான்!

உங்களுக்கு மரியாதை என்பது நீங்கள் எவ்வளவு வெற்றிகரமான வியாபாரி என்பதில் அல்ல. நீங்கள் எந்த அளவுக்கு மனிதத்தன்மையுடன் நடந்து கொள்கிறீர்கள் என்பதில்தான்!

சங்கரன்பிள்ளையின் தானியக் களஞ்சியத்தில் தீவிபத்து ஏற்பட்டு, அங்கு சேமித்து வைத்திருந்த தானியங்கள் எல்லாம் சாம்பலாகிவிட்டன.

சங்கரன்பிள்ளை துக்கத்தை மறக்க மதுக்கடைக்குப் போய்விட்டார். அவர் மனைவியோ இன்சுரன்ஸ் கொம்பனிக்குக் கோபத்துடன் போனாள். மனேஜரின் அறையில் புயல் போல் நுழைந்தாள் "எங்கள் தானியக்கிடங்கை ஐந்து லட்சத்துக்கு இன்ஷுர் செய்திருக்கிறோம் அந்தப் பணத்தை உடனே எண்ணிவையுங்கள்" என்று சத்தம் போட்டாள்.

"அம்மணி நீங்கள் என்ன தொகைக்கு காப்பீடு எடுத்திருக் கிறீர்கள் என்பது முக்கியமில்லை. உண்மையிலேயே, அசற்கு அந்த மதிப்பு உண்டா என்பன 5த் தீர்மானித்து விட்டுத்தான் நாங்கள் பணத்தைச் செட்டில் செய்வோம்" என்றார் மனேஜர்.

சங்கரன்பிள்ளையின் மனைவி யோசித்தாள். "அதுதான் இங்கே விதிமுறை என்றால், என்கணவர் மீது எடுத்திருக்கும் இன்சுரன்சை உடனே ரத்துச் செய்யுங்கள்" என்றாள் மறக்காதீர்கள்... உங்கள் உண்மையான மதிப்பு, வெளியில் நீங்கள் எவ்வளவு வெற்றிகரமாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதில் இல்லை. உள்ளுக்குள் நீங்கள் எப்டிப்பட்டவர் என்பதில்தான் இருக்கிறது.



ஆன்மீகம் 46

உங்களுக்கு ஆதாயம் என்பதற்காக அடுத்தவரைச் சுரண்ட நினைத்தால் அதற்கான சாமர்த்தியங்களை பயன்படுத்துவதில் உங்களைத்தான் எரித்துக்கொள்வீர்கள்.

அதைவிடுத்து, நீங்கள் என்ன தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் அடுத்தவர்மீதிருக்கும் அக்கறையை வெளிப்படுத்தும் ஒரு சாதனமாக அதை அமைத்துப்பாருங்கள். உங்கள் அன்பின் ஒரு வெளிப்பாடாக அதை அமைத்துப் பாருங் கள் வெற்றியுடன் அமைதியும் ஆனந்தமும் உங்களைத்தேடிவரும்.

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# தமிழ் நாவல்கள் சில நோக்கங்கள்

11



நீதியே நீ கேள் நாவலில் இனம் காதலுக்குத்தடையாகிறது. சாதிய வேறுபாடும் இன வேறுபாடும் காதலுக்கு இந்நாவல்களில் தடையாக

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

வில்லை. ஆனால் ஏழை - பணக் காரன் என்ற பொருளாதார வேறுபாடு கொண்ட காதல்கள் இந்தநாவல் களில் தோல்வி காண்கின்றன. இளங்கீரன் தனது கருத்துக்களில் பொருளாதார வேறுபாடுகளையே பெரிதாகக் கருதுகிறார்.. இளங்கீரன் மார்க்சியக் கருத்துக்களில் மிக்க ஈடுபாடு கொண்டவர். வர்க்க வேறுபாடுகள் சமூக வாழ்க்கையில் சாதியத்திலும் பார்க்க செல்வாக்கு செலுத்துவதாக யாழ்ப்பாண சமூக யதார்த்தத்திற்கு மாறாக நம்புவர்.

ஈழத்து இலக்கியத்தில் 'சிற்பி ' என்ற புனை பெயரில் மறைந்திருந்து எழுதிவரும் சிவசரவணபவன் முக்கியமான ஒரு படைப்பாளி. அவர் நடத்திய கலைச் செல்வி என்ற சஞ்சிகை ஈழத்து இலக்கிய உலகில் ஆற்றியபணி அற்பமன்று. அத்தோடு அச்சிஞ்சிகை உருவாக்கிய எழுத்தாளர்கள் இன்றைய புனைகதைத் துறையில் பிரபல்யங்களாகவுள்ளனர். சிற்பி அவர்கள் சிறுகதைப் படைப்பாளியாகவும் நாவலாசிரியரகவும் ஆய்வாளராகவும் விளங்கிவருகின்றார். 'உனக்காகக் கண்ணே', அவர் 1959களில் கலைச் செல்வியில் தொடராக எழுதி 1973 இல் வெளிவந்த நாவலாகும்...

சிற்பியின் 'உனக்காக கண்ணே' என்ற நாவல் உள்ளடக்கத்தைப் பொறுத்தளவில் ஒரு காதல் கதையாயினும் உருவத்தைப் பொறுத்தளவில் கவனிப்புக்குள்ளாகும் ஒரு நாவலாக உள்ளது. இந்நாவலை யாழ்ப்பாணம் முத்துச்சுடர் என்ற பதிப்பகம் பலருடைய உதவிகளுடன் இந்நூலை வெளியிட்டுள்ளது. இந்நாவலின் தொடக்கத்தில் சந்திப்போம், சிந்திப்போம் என்ற தலைப்புக்களில் இரண்டு முன்னீடுகளுள்ளன. சந்திப்போம் பகுதியை பிரபல எழுத்தாளார் தேவன்-யாழ்ப்பாணம் எழுதியுள்ளார். சிந்திப்போம் பகுதியை செங்கை ஆழியான் எழுதியுள்ளார். உனக்காகக் கண்ணே அக்காலப்பகுதியில் வெளிவந்த தரமான நாவல்களில் ஒன்றாகும். ஆசிரியரின் கதைத் தடத்தை நாம் இலகுவில் புரிந்து கொள்ள முடிகிறது. 'துன்பக்கதைகளைப் படிப்பதில் வாசகருக்கு இருக்கும் ஆவலும் ஆர்வமும் இன்பங்களைப் படிக்கும் போது இருப்பதில்லை. அதனாற்றான் இன்றும் அம்பிகாபதி- அமராவதி, லைலா-மஜ்னு, அனார்கலி-சலீம் கதைகளை விழுந்து விழுந்து படிக்கிறார்கள். இந்தக் கதைகள் சாகாத காதல் கதைகளாக இன, மத, மொழி வேற்றுமைகளைக் கடந்து எல்லார் இதயத்திலும் சிரஞ்சீவிக் கதைகளாக விளங்குகின்றன' என்று ஓரிடத்தில் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். அதனாற்றான் மேலும் சாதிப்பாகுபாடு, அரசியல் கருத்துக்கள் என்பன போன்றல்லாது, காலதேச வர்த்தமானங்களைக் கடந்த காதல், கோபம், பொறாமை முதலான மனிதகுலத்தின் நிரந்தர உணர்ச்சிகளில் ஒன்றைத் தனது நவீனத்தின் கருவாகக் கொண்டுள்ளார்.

1960-1970களில் வெளிவந்த 54நாவல்களில் ஒரு நூல் மத்தாப்பு ஆகும். உண்மையில் இது ஒரு குறுநாவலாகக் காணப்படுகிறது. ஈழத்து இலக்கியத் துறையில் இது புதியதொரு பரிசோதனை முயற்சியாகும். மத்தாப்பு என்ற தலைப்பில் ஐந்து எழுத்தாளர்கள் ஒன்று சேர்ந்து ஐந்து அத்தியாயங்களாக மத்தாப்பை எழுதியுள்ளனர். இ.நாகராஜன், கனக செந்திநாதன், கு.வே.குறமகள், எஸ் பொன்னுத் துரை ஆகிய ஐந்து முன்னணிப் படைப்பாளிகள் இணைந்து இந்தப் படைப்பை உருவாக்கினர்.இவ்வாறான கூட்டு முயற்சி இலக்கியத்தில் முன்னரும் நிகழ்ந்திருக்கின்றது. தமிழகத்தின் சுதேசமித்திரன், உமா ஆகிய பத்திரிகைகளில் பலர் இணைந்து ஆக்கிய படைப்புக்கள் வெளிவந்திருக்கின்றன. கொலைக் குற்றம் சாட்டப்பட்ட மாரிமுத்துவின் கதையை 'மத்தாப்பு' விபரிக்கின்றது. மாரிமுத்துவை மையமாகக் கொண்டு கதை விரிகின்றது. 1958 இனக்கலவரத்தையும் இக்கதை தன்னோடு சேர்த்துக்கொண்டு நகர்கின்றது. தன்காதலுக்குரிய அலிஸ் நோணாவை இழந்து போகின்ற மாரிமுத்து இறுதியில் வெறும் மத்தாப்புக்கொட்டாக செல்கிறான். 'கருகிய கொட்டுகள் இனியாருக்குத் தேவை' என கதையை பொன்


கலாநிதி செங்கைஆழியான்
க.குணராசா

னுத்துரை நிறைவு செய்கிறார். இந்த நாவலில் யாழ்ப்பாண மொழிப் பேச்சு வழக்கும், மலையக சிங்களக் கிராமியப் பேச்சுக்களும் பாத்திரங்களுக்கும் களத்திற்கும் ஏற்ப விரவிக்காணப் படுகின்றன.மிகச் சிக்கலான இந்தமுயற்சியில் ஐவரும் வெற்றி பெற்றுள்ளார்கள். கதைப் போக்கைக் கலந்து பேசாது ஒவ்வொருவரும் விட்ட இடத்திலிருந்து தொடர்ந்ததாக அறியும்போது வியப்பு ஏற்படுகின்றது.எஸ் பொன்னுத்துரையின் அத்தியாயம் மத்தாப்பில் தூக்கலாக நிற்கின்றது. என்பதை மறுக்க முடியாது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லக்கினமும் கிரகங்களின் தன்மையும்



மேஷ லக்கினத்தில் பிறந்தவர் களுக்கு சந்திரன், சுக்கிரன், புதன், சனி ஆகியோர் பாவர்களாகக் கருதப்படுகிறது. சூரியன் ஐந்தாம் இடத்து அதிபதியானதாலும், குரு ஒன்பதாம் இடத்து அதிபதி ஆனதாலும், செவ்வாய் லக்கினாதிபதி ஆனதாலும் நன்மையைத் தரக்கூடியவர்கள்.

இதில்செவ்வாய்8ஆம்இடத்துஆதிபத்யம் பெற்ற போதிலும், குரு விரையாதிபத்யம் பெற்றபோதிலும்பாவத்தைச்செய்யமாட்டார்கள்.

இந்த ஜாதகர்களுக்கு குரு -சனி சம்பந்தம் விசேடமில்லை என்று கூறப்படுகிறது.

மேலும், சுக்ரன் ஏழாம் இடத்து அதிபதியாக இருந்த போதிலும், தன ஸ்தானாதிபதியாக வருவதால் கண்டத்தைத் தரமாட்டான் என்று கூறப்படுகிறது.

★ ரிஷப லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு, சந்திரன், குரு, சுக்கிரன் மூவர்களும் பாவக்கிரகங்களாக கருதப்படுகிறது. (பல நூல்களில் லக்கினாதிபதி பாவியாகி கெடுதல் செய்யமாட்டான் என்று கூறப்பட்டுள்ளது.)

சூரியன், சனி, புதன் இவர்கள் சுபர் என்று கூறப்படுகிறது. சனி, ரிஷப லக்கினத்திற்கு நல்ல இராஜ யோகத்தைத் தருவார் என்று கூறப்படுகிறது. ரிஷப லக்கினக்காரர்களுக்கு குரு, செவ்வாய், சந்திரன் தொல்லைகளை செய் வான் என்று கூறப்படுகிறது. புதன் 2 க்கு உடையவன் ஆனாலும், கெடுதல் செய்யமாட்டான், நன்மையே செய்வான் என்று கூறப்படுகிறது.

மிதுன லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு, குரு, புதன், செவ்வாய், சூரியன் ஆகிய நால்வர்களும் பாவக்கிரகங் களாக கூறப்படுகிறது. சுக்ரன், முழு சுபராக கூறப்பட்டுள்ளது. சனி, எட்டுக் குடையவன் ஆனபோதிலும் பாக்கிய ஸ்தானத்தின் அதிபதியாக உள்ளதால் கெடுதல் செய்வதில்லை என்று கூறப்படுகிறது. குரு சனிசேர்க்கை, குரு சனிசம்பந்தம் சுமாரா கவே எடுத்துக் கொள்ளப்படுகிறது. இந்த லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு சந்திரன் மாரகத்தை தரமாட்டான் என்று கூறப்படுகிறது. குரு மாரகம், மாரகத்திற்கு சமனான கண்டத்தை தருவான் என்று கூறப்படுகிறது.

★ கடக லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு புதன், சுக்கிரன் இவ்விருகிரகங்களும் பாவக் கிரகங்களாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. குரு - செவ்வாய் ஆகிய இருகிரகங்களும், சுபர்களாக கூறப்பட்டுள்ளது. இவ்விருவர் சம்பந்தமும் இராஜயோகத்தை தரும் என்று கூறப்படுகிறது. இந்த லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு சூரியன் மாரகத்தைத் தரமாட்டான் என்று கூறப்படுகிறது. புதன், சனி ஆகிய கிரகங்கள் தொல்லைகளை தரக்கூடியவர்களாக சொல்லப்படுகிறது.

★ சிம்ம லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு சனி, புதன், சுக்கிரன் இம்மூன்று கிரகங்களும் பாவக்கிரகங்களாக சொல்லப்பட்டுள்ளன. செவ்வாய், சூரியன் சுபர்களாகவும், சொல்லப்பட்டுள்ளது. புதன் இரண்டுக்கு உடையவனாக இருந்த போதிலும், மாரகத்தைக் கொடுக்க மாட்டான். சுக்கிரனும், சனியும் தொல்லைகளை தருவான் என்று கூறப்பட்டுள்ளது.

★ கன்யா லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு குரு, செவ்வாய், சந்திரன், புதன் ஆகிய நான்கு கிரகங்களும், பாவக்கிரகங்களாக கூறப்பட்டுள்ளன. சனி, சுக்கிரன் ஆகிய இருவரும் சுபர்களாக சொல்லப்பட்டுள்ளன. புதன் சுக்கிர சம்பந்தம் பெற்றால் இராஜயோகத்தைத் தருவான் என்று கூறப்பட்டுள்ளது. முறு

## ஜோதிடக் களம்

படியும் கவனத்தில் வைக்க வேண்டியது லக்கினாதிபதி சுகத்தையே கொடுப்பவன் என்று சில நூல்கள் வித்தியாசமாக சொல்கின்றன.

★ துலா லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு சூரியன, செவ்வாய், குரு ஆகிய மூவரும் பாவக்கிரகங்களாக சொல்லப்பட்டுள்ளன. புதன், சனி, சுக்ரன் ஆகிய மூவரும் சுபர்களாக சொல்லப்பட்டுள்ளன.

★ விருச்சிக லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு செவ்வாய், சுக்ரன், புதன், சனி ஆகிய நால்வரும் பாவக்கிரகங்களாக சொல்லப்பட்டுள்ளன. சந்திரன், குரு, சூரியன் ஆகிய மூவரும் சுபக்கிரகங்களாக சொல்லப்பட்டுள்ளன.

★ தனுர் லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு சனி, புதன், சுக்ரன், குரு ஆகிய நால்வரும் பாவக்கிரகங்களாக சொல்லப்பட்டுள்ளன. செவ்வாய், சூரியன் ஆகிய இருவரும் சுபர்களாக சொல்லப்பட்டுள்ளன.

★ மகர லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு செவ்வாய், சுக்ரன், குரு ஆகிய மூவரும் பாவக்கிரகங்களாக சொல்லப்பட்டுள்ளன. புதன் சுபராக சொல்லப்பட்டுள்ளது. சூரியன், சனி இவ்விருவரும் கெடுதல் செய்யமாட்டார்கள் என்று கூறப்பட்டுள்ளன.

★ கும்ப லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு சந்திரன், குரு, செவ்வாய் ஆகிய மூவரும் பாவக்கிரகங்களாக சொல்லப்பட்டுள்ளன. சுக்ரன், சனி ஆகிய இருவரும் சுபர்களாக சொல்லப்பட்டுள்ளன. இருவரும் சந்தர்ப்பத்திற்கு தகுந்தாற்போல் கெடுதல்கள் செய்வார்கள் என்று சொல்லப்பட்டுள்ளன.

★ மீன லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு சனி, புதன், சுக்ரன், சூரியன், குரு ஆகிய ஐவரும் பாவக்கிரகங்களாக சொல்லப்பட்டுள்ளன. செவ்வாய், சந்திரன் ஆகிய இருவரும் சுபர்களா சொல்லப்பட்டுள்ளன.

இவ்வாறு சந்திரகாவியம் என்ற ஜோதிட நூல் கூறுகிறது. பொதுவாக லக்கினாதிபதியாகவும், பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதியாகவும், 9 க்குடையவனாகவும் வரும் கிரகம் கெடுதல்கள் செய்யமாட்டார்கள் என்று ஜோதிட சிந்தாமணி கூறுகிறது. கேந்திராதிபத்ய தோஷத்தில் சுபர் இருந்தாலோ, பாவம் கூடினாலோ, பாவசம்பந்தம் அடைந்தாலோ, 1,3,5 அதிபதிகள் கெடுதல் செய்வார்கள் என்று கூறுகிறது.

# புலம்பெயர் தமிழர்களுடன் அரசாங்கம் இரகசியப் பேச்சு

## கலாநிதி விக்கிரமபாகு தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துமாறு கூறியபோது செவிமடுக்காது தற்போது புலம்பெயர் தமிழர்களுடன் இரகசிய பேச்சுக்களில் அரசு ஈடுபட்டு வருகின்றது என இடதுசாரிக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பல இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப் பட்ட பின்னர்நாடுகடந்த தமிழீழ அரசாங்க பிரமுகர்களுடன் இரகசியப் பேச்சு வார்த்தையில் அரசு ஈடுபட்டு வருகின்றது. அன்று விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடாத்தியிருந்தால் அழிவுகள் ஏற்படுவதிலிருந்து தடுத்திருக்கலாம்.

கடன் நிபந்தனைகளின் அடிப்படையில் இந்த நாட்டின் வளங்கள் தாரை வார்க்கப் படுகின்றன. காலி முகத்திடல் விற்கப் படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)


**கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல்விழாவை முன்னிட்டு பக்தர்களுக்கான பாதுகாப்புப் பிரிவினரின் அறிவித்தல்**

நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தர பொங்கல் விழாவுக்கு வருகைதரும் பக்தர்கள் குறிப்பாக பெண் பக்தர்கள் தயவு செய்து தங்கள் பாதுகாப்புக்கருதி தங்க ஆபரணங்கள் அணிந்து வருவதை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**இவ்வண்ணம்**
**ஆலய பரிபாலன சபை**

(ஞ-2688)



**கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல்விழாவை முன்னிட்டு தண்டல் ஒழுங்குகள் பற்றிய அறிவித்தல்**

மேற்படி நாகதம்பிரான் ஆலய பொங்கல்விழா எதிர்வரும் 19.03.2011 சனிக்கிழமை வழமைபோல நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு உழவியந்திர சகிதம் ஆலய சின்னம் பொறிக்கப்பட்ட பிரசுரங்களுடன் 13.03.2011 ஞாயிறு தொடக்கம் 17.03.2011 வியாழன் வரை வட்டக்கச்சி, இராமநாதபுரம், கல்மடுநகர், விசுவமடு, பிரமந்தனாறு, புன்னை நீராவி, மயில தர்மபுரம், திருவையாறு போன்ற பகுதிகளுக்கு வருகைதரவுள்ளார்கள் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

**இவ்வண்ணம்**
**ஆலய பரிபாலன சபை**

(ஞ-2689)




யா/வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தின் விவசாயப் பயிர்ச் செய்கைக்கான ஆரம்பவிழா அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வை யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த கத்துருசிங்க ஆரம்பித்து வைப்பதனையும் அருகில் வித்தியாலய அதிபர்,ஆசிரியர்கள், மாணவர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.
(படம்:-புன்னாலை கட்டுவன் செய்தியாளர்)

# கோட்டக் கல்விப்பணிப்பாளர் பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

தீவக கல்வி வலயத்தில் ஊர்காவற்றுறை கல்விக் கோட்டத்தில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பதவிக்கு தீவக கல்விவலயத்தில் கடமையாற்றும் இலங்கை அதிபர் சேவை தரம் 1, தரம் 2-I ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் தீவக வலயக்கல்வி அலுவலகத்தில் விண்ணப்படிவங்களை பெற்று எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பும்படி கேட்கப்படுகின்றனர்.

(ஸ்ரீ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சர்வதேச விசாரணையிலிருந்து இலங்கை அரசைக் காப்பாற்றுமா நல்லிணக்க ஆணைக்குழு?

முப்பது வருட போரின் காயங்களைக் குணப்படுத்துதல், போரின்போது இடம் பெற்றதாகக் கூறப்படும் மனிதஉரிமை மீறல்கள், போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறுதல் ஆகிய விடயங்களில் மேற்குலகம் மிகவும் கண்டிப்புடனேயே இருக்கிறது.

அண்மையில் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் றொபேட் ஓ பிளேக் வெளியிட்ட கருத்து இதை மீளவும் நினைவுபடுத்தியுள்ளது.

இலங்கை அரசாங்கம் இறுதிப் போரின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்களுக்கு பொறுப்புக் கூறத்தக்க வகையிலான விசாரணைகளை உள்நாட்டில் மேற்கொள்ளத் தவறினால், சர்வதேச அளவிலான விசாரணைகளுக்கு இழுத்துச் செல்லப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும் என்று அவர் கூறியிருந்தார்.

இது ஒன்றும் வெறும் கருத்தாக கணிக்கப்படத்தக்கதல்ல. இலங்கை அரசுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை என்றே கருத வேண்டும்.

அனைத்துலக போர்க்குற்ற விசாரணைகளை இலங்கை எதிர்கொள்ளும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் அவர் உறுதியாகக் கூறியுள்ளார்.

'சர்வதேசரீதியாக ஏற்றுக் கொள்ளத்தக்க விசாரணைகளை மேற்கொள்ளத் தவறினால் சர்வதேச விசாரணைகளை இலங்கை எதிர்கொள்ள நேரிடும்.

சர்வதேச தரத்திலான விசாரணைகளை நடத்தத் தவறினால் அனைத்துலக விசாரணைக் குழுவை நியமிப்பதற்கான அழுத்தங்கள் அதிகரிக்கும்.

இலங்கையுடனான நெருக்கத்தை வலுப்படுத்துவதற்கான முக்கிய விடயங்களாக நல்லிணக்கமும், பொறுப்புக் கூறுதல், மனிதஉரிமைகள் ஆகியவற்றை அமெரிக்கா எதிர்பார்க்கிறது. போரின் இறுதி சில மாதங்களில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக ஐ.நா மதிப்பீடு செய்துள்ளது என்றெல்லாம் அவர் கூறியுள்ளார்.

இதிலிருந்தே அமெரிக்காவின் பார்வை என்னவென்று புரிந்து கொள்ள முடிகிறது.

போர் முடிந்து விட்டது போருக்குப் பிந்திய சூழலைக் கையாள்வதென்பது இலகுவான காரியமல்ல. அது பல நாடுகளுக்கு பலவித படிப்பினைகளைக் கொடுத்துள்ளது.

இதைக் கவனத்தில் கொண்டு மட்டுமே அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகம் இதுபோன்று அழுத்தங்களைக் கொடுக்கவில்லை.

போரின் போது மறைக்கப்பட்ட போர்க்குற்றங்களை சாதாரணமாக எடுத்துக் கொள்ளாமல் அதில் சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதிலும், இன்னொரு போருக்குள் நாடு தள்ளிச் செல்லப்படாமல் இருக்கும் வகையில் தமிழர்களுக்கான உரிமைகளை உறுதிப்படுத்திக் கொள்வதுமே இந்த அழுத்தங்களின் அடிப்படை நோக்கம்.

றொபேட் ஓ பிளேக்கின் எச்சரிக்கும் தொனியிலான கருத்தையிட்டு இலங்கை அரசாங்கம் அதிகமாகவே வெறுப்படைந்தாலும் அதை வெளிக்காட்டிக்கொள்ள முடியாத சூழ்நிலை.

ஜெனிவாவில் ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையின் 16ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகியிருந்த போது தான் அவரது கருத்து வெளியானது. அந்தக் கட்டத்தில் இலங்கை நண்பர்களைத் தேடிக் கொண்டிருந்தது. எதிரிகளை உருவாக்க விரும்பவில்லை. ஜெனிவாவில் ஆபத்து வந்து விடாதபடி தவிர்ப்பதற்காக யாருடனும் பகைத்துக் கொள்ள இலங்கை அரசு விரும்பவில்லை. அதனால் அமெரிக்காவின் கருத்தை இலங்கை கண்டு கொள்ளாதது போன்று இருந்து கொண்டது.

ஆனால், பின்னர் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவரை அலரி மாளிகையில் சந்தித்த போது இது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடுமையான கவலையைத் தெரிவித்ததாகவும் தகவல்கள் வெளியாகின.

ஏற்கெனவே அமெரிக்க செனட் உறுப்பினர்கள் இணைந்து சர்வதேச போர்க்குற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று கோரியிருந்தனர். அதுபோன்ற கோரிக்கைகள் பிரித்தானியாவிலும் முன்வைக்கப்பட்டிருந்தது. இவை எல்லாவற்றையும் இலங்கை அரசாங்கம் கடும் சீற்றத்துடனேயே பார்க்கிறது.

இலங்கையில் நடந்துள்ள போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணைகளுக்கு அழைப்பு விடுக்க அமெரிக்காவுக்கோ, பிரித்தானியாவுக்கோ என்ன தகைமை உள்ளது என்ற வகையில், அது மறைமுகமாகத் தாக்குதல் தொடுப்பதையும் கவனிக்கத்தான் வேண்டும்.

உலகில் பல்வேறு நாடுகளின் போர்களில் சம்பந்தப்பட்ட பிரித்தானியாவும், அமெரிக்காவும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டது உண்மை.

ஆனால் அதையே காரணம் காட்டிக் கொண்டு இலங்கை அரசாங்கம் தப்பிக்கும் வழியைப் பின்பற்ற முடியாது. ஆரம்பத்தில் அப்படித் தான் முயற்சிகளை மேற்கொண்டது. அதனால் தான் ஆப்கானிஸ்தானில், ஈராக்கில் அமெரிக்கப் படைகளால் பொதுமக்கள் கொல்லப்பட்ட போது இலங்கை அரசு கண்டனம் தெரிவித்தது.

அதைத் தூக்கிப் பிடித்து ஊதிப் பெருப்பித்துக் காட்டியது. ஆனால் பின்னர் அதன் போக்கை மாற்றிக் கொண்டது.

போர்க்குற்றங்கள் செய்த அமெரிக்காவோ, பிரித்தானியாவோ, சர்வதேச விசாரணைகளுக்கு அழைப்பு விடுக்கத் தகுதியில்லை என்ற காரணத்தை முன்வைத்து, இலங்கையைக் காப்பாற்ற முடியாது என்ற நிலையில், நல்லிணக்க ஆணைக்குழுவை அரசாங்கம் அமைத்தது.

ஐ.நா பொதுச் செயலர் பான்கீ மூன் ஒரு விசாரணைக் குழுவை அமைக்கப் போவதாக அறிவித்திருந்த நிலையில் சர்வதேச போர்க்குற்ற விசாரணைகளுக்கான அழைப்புகள் விடப்பட்டிருந்த நேரத்தில் தான், இலங்கை அரசாங்கம் வேறு வழியில்லாமல் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைத்தது.

இந்த ஆணைக்குழு அமைக்கப்பட்ட போது பல்வேறு சந்தேகங்கள் இருந்தன.

இது உருப்படியான அறிக்கையைச் சமர்ப்பிக்குமா, அந்த அறிக்கை நீதியானதாக, நியாயமானதாக அமையுமா அந்த அறிக்கையில் கூறப்படும் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுமா என்றெல்லாம் கேள்விகள் இருந்தன. இப்போதும் இருக்கின்றன.

ஆனால் இப்போது இந்தக் கேள்விகளின் எண்ணிக்கை தான் கொஞ்சம் குறைந்துள்ளது அவ்வளவு தான்.

இந்த நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையைக் கையளிக்குமா, இல்லையா என்ற கேள்விக்கு இனிமேல் இடமே இருக்காது. ஏனென்றால் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட வேண்டியது மிகவும் அவசியமானது.

சர்வதேச அளவில் இலங்கை அரசாங்கத்தை காப்பாற்றிக் கொள்வதற்கு இந்த ஆணைக்குழுவின் அறிக்கை தான் முக்கியமானது. எனவே அதுபற்றி சந்தேகம் தேவையற்றது. இப்போதுள்ள கேள்விகளில் பிரதானமானவை இரண்டு மட்டும் தான். நீதியான அறிக்கையை ஆணைக்குழு கையளிக்குமா அதன் பரிந்துரைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்துமா என்பனவே அவை.

இத்தகைய சந்தேகங்களுக்கு கேள்விக்கு இனிமேல் இடம் கொடுக்கப்படக்கூடாது என்பதைத்தான் றொபர்ட் ஓ பிளேக்கின் கருத்து வலியுறுத்தி நிற்கிறது.


சர்வதேச தரத்துக்கமைவான உள்நாட்டு விசாரணைகள் மேற்கொள்ளத் தவறினால், சர்வதேச விசாரணைகளுக்கு இழுத்துச் செல்லப்படும் என்று அவர் கூறியிருப்பது நல்லிணக்க ஆணைக்குழு இன்னும் இன்னும் அதிகம் செயற்திறன் வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

பக்கச்சார்பற்ற தன்மையும், நீதியும் இதில் அதிகமாகவே எதிர்பார்க்கப்படுகின்றன. சர்வதேச தரநியமங்களுக்கு அமைவான விசாரணைகள் என்று வலியுறுத்தப்பட்டிருப்பது இதைத் தான். அதேவேளை, இந்த விசாரணைகளை மட்டுமன்றி அதன் பரிந்துரைகளின் நடைமுறைப்படுத்தலும் அவசியமானதாகவே கருதப்படுகிறது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகளும் அதன் நம்பகத் தன்மையும் தான் இலங்கை அரசாங்கத்தின் மீதான அழுத்தங்களைக் குறைக்கக் கூடும்.

இந்தநிலையில் கடந்தவாரம் தொலைக்காட்சிகளில் இடம்பெற்ற கலந்துரையாடல்களில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எந்தவொரு அரச அதிகாரியையும் சர்வதேச விசாரணைகளுக்குக் கொண்டு செல்ல அனுமதிக்கமாட்டேன் என்று தெட்டத் தெளிவாகக் கூறியுள்ளார்.

தன் மீதோ, அரசாங்கத்தின் மீதோ அல்லது அரச அதிகாரிகள் மீதோ குற்றம் சுமத்துவதானால் அதுபற்றி நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளிக்குமாறும் அவர் கூறியுள்ளார். மனிதஉரிமைகள் அமைப்புக்களுக்கும் ஐ.நா நிபுணர்களுக்கும் இதற்கான அழைப்புகள் விடப்பட்ட போதும் அவர்கள் சாட்சியமளிக்க மறுத்து விட்டதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார். இந்த விடயத்தில் சர்வதேச விசாரணைகளுக்கு இலங்கை அரசு ஒருபோதும் உடன்படப் போவதில்லை என்பது ஜனாதிபதியின் கருத்தில் இருந்து உணரப்படுகிறது.



உள்ளூராட்சித் தேர்தல் நெருங்கும் நேரத்தில் சர்வதேச அளவில் இலங்கை மீதான நெருக்கடிகள் அதிகரித்து வரும் நிலையில் தான் இந்தக்கருத்தை ஜனாதிபதி வெளியிட்டுள்ளார்.

அத்துடன் அண்மைக்காலமாக நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை வெளியாகும் வரை பொறுத்திருங்கள் என்று அரசாங்கம் அவகாசம் கேட்டு வருவதும் கவனிக்கத்தக்கது.

இவற்றில் இருந்து ஒரு முடிவுக்கு வரமுடிகிறது. நல்லிணக்க ஆணைக்குழுவை ஒரு கவசமாகப் பயன்படுத்திக்கொள்ள அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்பதே அது. ஆனால் இது பலமான அரணாக அமையுமா - இல்லையா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை பக்கச்சார்பற்ற வகையில் அமைந்துள்ளது என்று சர்வதேச சமூகம் சான்றிதழ் கொடுக்க வேண்டும். அதைவிடத் தமிழர் தரப்பும் ஏற்கவேண்டும். அப்படியானதாக இருந்தால் தான் அது இலங்கை அரசைக் காப்பாற்றும் கவசமாக இருக்கும். இல்லையேல் அது வெறும் மணல் கோட்டையாக அமைந்துவிடும். அத்துடன் சர்வதேச விசாரணைக்கான அழுத்தங்களும் அதிகரிக்கும்.

என்ன நடக்கப் போகிறது என்பதைத் தீர்மானிக்கும் சக்தியாக இப்போது இருப்பது நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தான். அதாவது எல்லாமே நல்லிணக்க ஆணைக்குழுவின் கையில் தான் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய உயர் கல்லூரியின் பேரோதனை

## (வெளிவாரி-2010) B.A பட்டம் பெற்ற மாணவர்களை

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



வை.சுதாஸ்கரன், பூநகரி | க.சுதாகரன், கொடிகாமம் | சி.ரவிதாசன், புத்தூர் | ச.சுரேஸ்குமார், நல்லூர் | செ.லவன், கைதடி | ஆர்.கே.செல்வம், தாவடி | ஸ்ரீ.செந்தூரன், ஊர்காவற்றுறை



ப.விஸ்ணுரூபன், புத்தூர் | எஸ்.கோகுலன், இணுவில் | ச.சுகந்தன், காரைநகர் | சி.வாசுகி, அச்சுவேலி | சி.தாரினி, நெல்லியடி | மா.சசீனா, புத்தூர் | ச.வித்தியகலா, கொக்குவில்



இ.ஜெயரூபி, ஆவரங்கால் | அம்பிகா, நீர்வேலி | த.தனுசியா, கோண்டாவில் | ஜெ.சுலக்சனா, ஊர்காவற்றுறை | சுபாஜினி, யாழ்ப்பாணம் | த. துஷ்யந்தி | த.லிங்கேஸ்வரி, காரைநகர்



பா.தேவரானி, ஆனைக்கோட்டை | சு.குமுதினி, ஏழாலை | ம.கீர்த்தீபா, நல்லூர் | வை.தேவகி | ம.எழில்ஷோபா, யாழ்ப்பாணம் | ஆ.சிவரஞ்சினி, பொலிகண்டி | க.தனுஷா, நல்லூர்



வி.சர்வாஜினி, மீசாலை | பா.பாலகஜேந்தினி, கொக்குவில் | த.ஜானகி, பருத்தித்துறை | கோ.மஞ்சுளா, வேலணை | கே.அபிராமி, நல்லூர் | ம.விஜயகீதா, மானிப்பாய் | ஜே.தேவகி, சுன்னாகம்



க.ஜெயகாந்தினி, சுன்னாகம் | சி.யனுஷா, அச்சுவேலி | பா.யசோதா, இடைக்காடு | நா.கௌசிகா, கோண்டாவில் | சி.சிவதர்மினி, தெல்லிப்பழை | ச.தர்ஜிதா, கோண்டாவில் | செ.சுபாஷினி, உடுப்பிட்டி | தி.சுதாகினி, ஆனைக்கோட்டை

**எமது கல்லூரியில் கல்வி பயின்று B.A பரீட்சைக்குத் தோற்றிய 56 மாணவர்களில் 43 மாணவர்களை சித்தியடைய வைத்த எம்து கல்லூரி விரிவுரையாளர்களுக்கு நன்றி கூறுவதோடு சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமிதமடைகின்றோம்.**

**வாழ்த்துவோர்**
**2011இல் B.A பரீட்சைக்குத் தோற்றவுள்ள**
**இறுதியாண்டு மாணவர்கள்**
**புதிய உயர்கல்லூரி, யாழ்ப்பாணம்.**

(4039)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் தமிழர்களில் சிலர் சுயலாப நோக்கில் செயற்படுகின்றனர்



புலம்பெயர் தமிழர்களில் சிலர் சுயலாப நோக்கில் செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி மஹிந்தராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி தெரிவிப்பு

தமிழ் மொழியில் சரியாகப் பேசத் தெரியாதவர்கள் மற்றும் வவுனியா எந்த திசையில் அமைந்துள்ளதென்பது தெரியாதவர்கள் இன்று தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்து வருவதாக அவர் குறிப் பிட்டுள்ளார்.

தமிழ் மக்களை ஒருபோதும் அரசாங்கம் வெளியேற்றப் போவதில்லையெனவும் சில தமிழ் புலம் பெயர் அமைப்புக்கள் நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்த முனைப்பு காட்டி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக மனிதாபிமான மீட்புப் பணியில் ஈடுபட்டவர்களை சர்வதேச நீதிமன்றங்களின் முன் ஆஜர் படுத்த முயற்சிக்கப்பட்டு வருவ தாக அவர் தொரிவித்துள்ளார்.

இலங்கையின் குறிப்பாக யுத்தம் இடம்பெற்ற வட பகுதியின் நிலமைகளை நேரில் வந்து பார்வையிடுமாறு புலம்பெயர் தமிழர்களுக்கு தாம் ஏற்கனவே அழைப்பு விடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# அரசாங்கம் நீண்டகாலத்திற்கு ஆட்சி செய்ய முடியாது

## சஜித் எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

மக்களின் விருப்பு வெறுப்புக்களை அறிந்து ஆட்சி நடத்தத் தெரியாத இன்றைய அரசாங்கம் தொடர்ந்து நீண்ட காலத்திற்கு ஆட்சி செய்ய முடியாது என ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி தேர்தல் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இந்த அரசாங்கம் மக்களின் வாழ்க்கையைச் சீரழித்திருப்பதாக குற்றஞ்சாட்டிய அவர் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் வரை மக்கள் அபிவிருத்தி என பேசிக் கொண்டிருந்த அரசாங்கம் அதிகாரத்தைக் கைப் பற்றிய பின் மக்களை மறந்து செயற்படுகிறது எனத் தெரிவித்தார்.

இந்த அரசாங்கத்திற்குத் தெரிந்ததெல்லாம் கட்டப்பட்டுள்ள வீடுகளை உடைத்து அழிக்கவே அன்றி வீடுகள், கட்டடங்களை புதிதாக நிர்மாணித்துப் பழக்கமில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கந்தசாமி கமலேந்திரன் (தோழர் கமல்) (பிரதம அமைப்பாளர், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி யாழ். மாவட்டம்)



கௌரவ அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா (ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரும்)



இராசரத்தினம் ஜெயபாலசிங்கம் (தோழர் அன்பு) (ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அமைப்பாளர் வலிகாமம் வடக்கு)

எமது மண்ணில் நிகழ்ந்த யுத்தம் காரணமாக 1990 ஆம் ஆண்டு தொடக்கம் இருப்பதற்கு இடத்துக்கிடம் அலைந்து அல்லல்பட்ட எமது மக்களை சொந்தமண்ணில் மீளக்குடியமர வைத்து, மின்சாரம், குடிநீர், வீதி புனரமைப்பு மற்றும் தற்காலிக வீட்டுத்திட்டம் போன்ற வசதிகளை அமைத்துக் கொடுத்து உதவி புரிந்த

**கௌரவ அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும், எமது மக்களுக்கு எந்நேரமும் உதவிபுரிந்த பிரதம அமைப்பாளர் **கந்தசாமி கமலேந்திரன்** அவர்களையும்,

காலநேரம் பாராது எமக்காக உழைக்கும் **இராசரத்தினம் ஜெயபாலசிங்கம்** அவர்களையும் மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**கிராம அபிவிருத்திச் சங்கம், J/228, தெல்லிப்பழை கிழக்கு வாழ் மக்கள்.**

(4045)



**வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

## வெளிவாரிப் பரீட்சைகள் –2009
## கலைமாணி பகுதி -II- 2008 (வெளிவாரி)
## மீள் பரீட்சார்த்திகளுக்கான அறிவித்தல்

கலைமாணி பகுதி - II-2006 & 2007 பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப்பரீட்சையில் சித்தியடையத் தவறிய பரீட்சார்த்திகளிடமிருந்து மீள் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 15.04.2011 (வெள்ளிக்கிழமை) வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு பாட அலகிற்கும் மீள்பரீட்சார்த்திகள் செலுத்த வேண்டிய பரீட்சைக் கட்டணம் ரூபா 200/= ஆகும். யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 100/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

தபால்மூலம் விண்ணப்பப்படிவத்தினைப் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 100/= க்கான காசுக்கட்டளை/ தபாற் கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா 40/= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 ×20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன், உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
14.03.2011

(சி-2701)



## யாழ்ப்பாணம் மாநகர சபை

### ஆதனப் பெயர்மாற்றம் சம்பந்தமான அறிவித்தல்

வட்டாரம் 21 இல் ஆதன இலக்கங்கள் 390, 392, 396, புன்னாலை வீதியிலுள்ள ஆதனங்களை கே. செல்வகுமாரும் மனைவி சுஜாதா என்பவர் தனது பெயரில் பெயர்மாற்றம் செய்து தருமாறு விண்ணப்பித்துள்ளார்.

இவ்வாதனங்கள் எமது பதிவேடுகளின் படி ஜனாப் சுல்த்தான் மொகடீன் மொகமட் றபீக்கின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**ஆதன விபரங்கள்:**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி, யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட வண்ணார்பண்ணை, கோவில்பற்று, வண்ணார்பண்ணை தென்கிழக்கு இறை "பரந்தன்புளியடி" நிலப்பரப்பு 2 குளி 13.67 இது நில அளவையாளர் கே.பஞ்சாட்சரத்தினால் 2003.10.09 ஆம் திகதி 3090 இலக்கப்படத்தில் இரு கடைக் கட்டிடமும் வீடும் கிணறும் ஆகும்.

இப்பெயர்மாற்றம் சம்பந்தமாக ஆட்சேபனைகள் ஏதும் தெரிவிக்க விரும்புவோர் இவ்வறிவித்தல் பிரசுரமான தினத்திலிருந்து ஒருமாத காலத்துக்குள் தகுந்த ஆவணங்களுடன் "முதல்வர், மாநகரசபை, யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு ஆட்சேபனைகளை அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஆட்சேபனைகள் ஏதும் கிடைக்கப் பெறாது விட்டால் விண்ணப்பதாரரின் விண்ணப்பத்திற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

திருமதி.யோ.பற்குணராசா
முதல்வர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

14.03.2011

(சி-2698)



## இடமாற்ற அறிவித்தல்

இதுவரை காலமும் சுன்னாகச் சந்தி (மக்கள் வங்கிக்கு முன்பாக) இயங்கி வந்த 'சாயிராம் மோட்டோர்ஸ்' என்னும் வாகன உதிரிப்பாக விற்பனை நிலையம் இன்று (16.03.2011) புதன்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் சுன்னாகத்தில் அமைந்துள்ள றோயல் சேர்விஸ் வளாகத்திலுள்ள புதிய கட்டடத்தில் புதிதாக ஆரம்பித்து வைக்கப்படுகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத் தருகின்றோம்.



நிறுவன உரிமையாளர்

# சாயிராம் மோட்டோர்ஸ்

சுன்னாகம். தொ.பே: 021 224 1090

(சி-2697)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடம்பரத்தின் மென்மையான மெத்தையின் மீதுதான் பெரும்பாலான இராஜ்யங்கள் அழிந்தன. - யங்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# முறிகண்டிப் பிள்ளையாருக்கு நேர்ந்த கதி பாரீர்

'இலங்கையில் இந்து மதம்' இப்படி ஒரு தலைப்புக் கொடுத்து கட்டுரை எழுதுங்கள் என்றால் கத்தை கத்தையாக எழுதித் தள்ளு வதற்குப் பலர் உளர்.

ஆனால் இலங்கையில் இந்துமதம்- சைவம் படாப்பாடுபட்டு தன்னிலை இழக்கும் நிலையில் இருப்பதைக் கண்டு வெகுண்டெழுவதற்கு யாரும் உளரோ எனில் இல்லவே இல்லை எனலாம்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலருக்குப் பின்பு இன்னுமொரு நாவலர் தோன்றாததன் காரண மாக சைவ சமயத்தின் சிறப்புக்கள் சிதைக்கப் படுகின்றன.

அந்த சிதைப்புக்கு திட்டமிட்டு ஆளாக்கப்பட்ட ஆலயங்களில் முறிகண்டிப் பிள்ளையார் ஆலயமும் ஒன்று.

ஏ-9 பாதையால் பயணிக்கும் அத்தனை பேரும் 'விநாயகா' நீயே வழித்துணை என்று வழிபட்டுச் செல்லும் அந்த உயரிய பண்பாட்டுச் சிறப்புக்கு உலைவைக்கப்பட்டது.

ஆம், முறிகண்டிப் பிள்ளையார் கோவிலுக்கு மிக அண்மையாக ஹோட்டல் நிர்மாணிக்கப்பட்டது.

ஆலயத்துக்கு அருகில் ஹோட்டல் அமைப்பது அபத்தம் என்று சைவப் பற்றாளர்கள் கூறினர்.

ஐயா! அஞ்சற்க, முறிகண்டிப் பிள்ளையாருக்கு அண்மையில் சைவ ஹோட்டலே அமைக்கப்படுகிறது எனக் கூறப்பட்டது.

சரி, சைவ சமயத்தவர்கள் எதிர்த்து இந்த மண்ணில் ஏதேனும் நடக்கப்போகிறதா என்ன? சைவ ஹோட்டல் தானே என்று மக்கள் அமைதியடைந்தனர். ஆனால் இப்பொழுது அந்த சைவ ஹோட்டல் அசைவ ஹோட்டலாக மாறிவிட்டது.

என்னசெய்வது? யாரிடம் முறையிடுவது? எங்கள் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தங்கள் வேலை செய்யவே நேரம் இல்லை. இதற்கு மேலாக தேர்தலில் வெல்லும் வரை விநாயக வழிபாடு.

அதற்குப் பின்னர் சைவக் கடவுளோடு நின்றால் மரியாதையில்லை. அதனால் இவை பற்றி தெரிந்திருந்தாலும் அதுபற்றி அலட்டிக் கொள்ள அவர்களுக்கு நேரமில்லை.

இந்த துயரத்துக்கு மேலாக ஏ-9 பாதையால் பயணிக்கும் வாகனங்கள் தாம் விரும்பும் இடங்களில் வாகனங்களை நிறுத்தும் முறைமையும் இப்போது வழக்கத்தில் உள்ளன.

அத்தோடு முறிகண்டிப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையாக வாகனங்களை நிறுத்தி பயணிகள் வழிபாடாற்றுவதற்கு வசதி செய்யாமல் ஹோட்டலுக்கு அருகில் வாகனங்களை நிறுத்தும் நடைமுறையும் தற்போது அமுலுக்கு வந்துள்ளது.

இப்படி ஒரு அவல நிலை, பௌத்தத்திற்கோ, கத்தோலிக்கத்துக்கோ, இஸ்லாத்திற்கோ இந்த மண்ணில் மருந்திற்கும் ஏற்பட முடியாதென்பதை இவ்விடத்தில் சொல்லித்தான் ஆகவேண்டும்.

விநாயகா, விண்வெளியைச் சுற்றி வந்த சுனித்தா வில்லியம்ஸ் என்ற அமெரிக்க கிறிஸ்தவப் பெண்மணி விண்வெளிக்கு உன்னைத்தான் தன்னுடன் எடுத்துச் சென்றார். ஆனால் இங்கோ உனக்கு வழிபாடு செய்வதற்கே குந்தகம் விளைவிக்கப்படுகிறது.

என்ன செய்வது? இலங்கையில் இந்துமதம் பாரிசவாதத்தால் படுக்கையில் வீழ்ந்து கிடக்கிறது. அதைத் தூக்கி நிறுத்த யாருமில்லை. ஆவதைப் பார்க்க வேண்டியதுதான் மிச்சம்.

# சம்பள அதிகரிப்பை வலியுறுத்தி

# பல்கலை.ஆசிரியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்புத் தொடர்பில் இது வரை அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து நாட்டிலுள்ள சகல பல்கலைக்கழக ஆசிரியர்களும் நேற்று வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு ஆதரவாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர்களும் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் யாழ்.பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத் தலைவர் பேராசிரியர் எஸ்.இளங்குமரன், பல்கலைக் கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கத் தலைவர் கலாநிதி எஸ்.அறிவழகன் ஆகியோர் கருத்துத் தெரிவிக்கையில்,

யாழ்.பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரை ஆசிரியர் சங்கத்திலுள்ள 235 ஆசிரியர்களும், விஞ்ஞான ஆசிரியர் சங்கத்திலுள்ள 52 ஆசிரியர்களும் இவ்விரு சங்கத்திலும் அங்கம் வகிக்காத ஏனைய 30 ஆசிரியர்களும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நிரந்தர வேலை பெறும் நோக்குடன் 31 வருடங்கள் நாம் படிக்க வேண்டியுள்ளது. பல்கலைக்கழகத்தை பொறுத்தமட்டில் பரீட்சையில் தகுதியான இடங்களை பெற்றவர்களே பணிக்காக உள்வாங்கப்படுகின்றனர். எனினும் இவ்வாறான சம்பள உயர்வுக்காக போராட்டம் நடத்த வேண்டியுள்ளது.

இதனால் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும். மொத்த தேசிய உற்பத்தியில் 6 வீதத்தை கல்வி மற்றும் உயர் கல்விக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும். பல்கலைக்கழக ஆசிரியர் தொழில் தனித்துவமானது. அது மதிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை நிரந்தர சம்பளம், கௌரவமான வேலை என்பவற்றை கருத்தில் கொண்டே இந்த பல்கலைக் கழக ஆசிரியர் பணியை தேர்ந்தெடுத்தோம்.

இந்த அரசாங்கம் திறமையானவர்களுக்கு தகுதியான இடமளிக்க மறுக்கிறது. இவ்வாறான நிலையில் வெளி நாடுகளுக்குச் சென்று பணிபுரிவதைத் தவிர வேறுவழியில்லை.

மேலும் எமது கோரிக்கைகள் நிறைவேற்றத் தவறினால் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம் மீண்டும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளது. இதற்கு எமது பல்கலைக்கழக ஆசிரியர்களும் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என அவர்கள் தெரிவித்தனர். (ஸ்ரீ-6)

# இந்திய உயர் ஸ்தானிகரிடம்

## இன்று மனு கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடலில் மீன்பிடிப்பதை தடுக்க கோரி இந்திய உயர் ஸ்தானிகர் அசோக் கே காந்தாவிடம் வடமாகாண மீனவர்கள் சமாஜம் இன்று மனுவொன்றைகையளிக்கவுள்ளது.

இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கூட்டு அணுகுமுறையை மேற்கொள்ளுமாறு இரு நாடுகளையும் கோரவுள்ளதாக சமாஜத்தின் ஏற்பாட்டாளர் ஹேர் மன் குமார் கூறியுள்ளார்.

இப்பிரச்சினை காரணமாக இலங்கை மீன்பிடித்துறையின் வருமானத்தில் 50சதவீதம் இழக்கப்படுவதாக யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சூசை ஆனந்தன் தெரிவித்தார். (ந-5)

# விலங்கு விசர்நோய் தடுப்பு மருந்தேற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட குருநகர் பொதுச்சுகாதார பிரிவு பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதற்கமைய இன்று புதன்கிழமை காலை 9 மணிமுதல் 12.30 மணி வரை சீநோர் கடற்றொழிற்சாலை முன்பாகவும் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் 12.30 மணி வரை கடற்கரை வீதி, தண்ணீர் தாங்கி சந்தியிலும் (செபஸ்ரியர் கோவில் முன்பாக) வைத்து வழங்கப்படவுள்ளது.

எனவே, இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்குறித்த ஊசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம. மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-9)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



தூய்மையுடன் இரு. தன்னலமற்று இரு. இதுவே சமயமாம். என் அருமைக் குழந்தைகளே! சமய வாழ்வின் உட்பொருள் கொள்கைகளில் இல்லை. நடைமுறையில்தான் உள்ளது. நல்லவனாக இருப்பது, நல்லதைச் செய்வது - இதில்தான் சமயத்தின் முழுத் தன்மையும் அடங்கியுள்ளது. இறைவா! இறைவா! என்று கதறிஅழைப்பதில், அழுவதில் சமயம் இல்லை. இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுவதில், அவன் விரும்பிய வண்ணம் நடந்து கொள்வதில்தான் சமயம் உள்ளது.

இங்கு கூடியிருக்கும் நீங்கள் அனைவரும், நல்ல இளைஞர்கள் சேர்ந்துள்ள கூட்டமாகும்! உங்களில் பெரும்பாலோர் நீங்கள் பிறந்த பொன்னாட்டிற்கு நல் ஆபரணமாய், உங்கள் தாய்த்திருநாட்டிற்கு அதன் தவப்பயனாய் விளங்கப் போகிறீர்கள். அந்தப் பொன்னான காலம் வெகு தொலைவில் இல்லை. இதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

அவ்வப்போது உலகத்தினிடமிருந்து உங்களுக்குப் பலமான அடி கிடைக்கலாம். அதற்காக மனம் குலையக் கூடாது. கண நேரத்தில் அது சரியாகிவிடும். எல்லாமே சரியாகிப் போகும்.

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## நினிவே நகர மக்களைப் போல உடனே கீழ்ப்படிவோம் (லூக் 11:29-32)

யோனா எல்லோரையும் கவர்ந்த ஒரு இறைவாக்கினர். கடவுளின் அன்பையும் இரக்கத்தையும் மன்னிப்பையும் இவர் தன் வாழ்வாலும் போதனையாலும் சான்று பகர்கிறார். கடலில் வீசப்பட்ட இவர், மூன்று நாள் திமிங்கிலத்தின் வயிற்றில் இருந்தார். மூன்றாம் நாள் அந்த பெரிய மீன் அவரைக் கரையில் கக்கியது என விவிலியத்தில் பார்கின்றோம்.

அடையாளம் கேட்ட மக்கள் கூட்டத்திற்கு இயேசு இந்த யோனாவின் வாழ்க்கையைத் தன் வாழ்வில் நடைபெற இருக்கும் மரணம், உயிர்ப்புக்கு அடையாளமாகச் சொன்னார். இந்த யோனாவின் செய்தியைக் கேட்டு, நினிவே மாநகர மக்கள் அனைவரும் நோன்பிருந்து மனமாற்றம் பெற்றனர். அரசன், குழந்தை, முதியவர் அனைவரும் பாவ வாழ்வை விட்டு மனம் திரும்பினர்.

இயேசு தம் தலைமுறை மக்களை நினிவே நகர மக்களோடு ஒப்பிட்டு, நினிவே நகர மக்களைப் பாராட்டுகிறார். தமது தலைமுறையினரைக் கண்டனம் செய்கிறார். இந்த வாசகத்தின் மூலம் இன்று நாமும் நினிவே நகர மக்களோடு ஒப்பிடப்படுகின்றோம். நினிவே நகர மக்கள் உண்மையில் பாராட்டுக்குரியவர்கள், காரணம் யோனாவின் மனந்திரும்புவதற்கான அறைகூவலை அவர்கள் கேட்டபொழுது குறைகூற வில்லை, ஏளனம் செய்யவில்லை, தள்ளிப்போடவில்லை. மாறாக, உடனே அந்த அறை கூவலை ஏற்று தங்கள் வாழ்வை மாற்றிக் கொண்டார்கள்.

அந்த யோனாவை விட பெரியவர் இயேசு என்பதை அடையாளம் கேட்ட மக்கள் கூட்டம் உணரவில்லை. இயேசு இதைச் சொல்லியும் அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. சலித்துப்போன இயேசு, இருப்பினும் சோர்ந்து போகவில்லை. தொடர்ந்தும் இந்த யோனாவின் அடையாளத்தை தன் மரணத்திற்கும் உயிர்ப்புக்கும் ஒப்பிட்டு அடையாளமாகக் கொடுக்கிறார். நம் வாழ்விலும் இயேசு இவ்வாறு பல அடையாளங்களைத் தருகிறார். அந்த அடையாளங்களில் ஆண்டவனின் அன்பை, ஆற்றலை, இரக்கத்தைக் காண்போம்.

நாம் எப்படி? இத்தவக்காலம் மீண்டும் ஒருமுறை நமது வாழ்வை ஆய்வு செய்ய, மாற்றிக் கொள்ள அழைப்பு விடுக்கிறது. நாம் என்ன செய்கிறோம். அலட்சியம் செய்கிறோமா? புறக்கணிக்கிறோமா? ஒத்திப்போடுகிறோமா? அல்லது நினிவே நகர மக்களைப் போல உடனே கீழ்ப்படிகிறோமா? உடனே செயற்பட்டால் நினிவே மக்களைப் போல நாமும் பேறு பெற்றவர்களாவோம்.

ம. பிரான்சிஸ்,
கத்தோலிக்க சுதந்திர,
பத்திரிகையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## அம்பலவாணர் சண்முகநாதன்

சிறுப்பிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் ஏழாலையை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் சண்முகநாதன் நேற்று 15.03.2011 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் மற்றும் குணவதியின் அன்பு மகனும் கோமதியின் அன்புக் கணவரும் டிலானி, கீர்த்திகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிதம்பரநாதன் (சுவிஸ்), புஸ்பநாதன் (சுவிஸ்), புனிதவதி, அருந்ததி, காலஞ்சென்ற விமலநாதன் ஆகியோரின் சகோதரரும் கலாரஜனி, ஜெயலக்சுமி, சிவலிங்கம் (பொதுமுகாமையாளர் MPCS நீர்வேலி), சிறிதரன் (முகாமைத்துவ உதவியாளர் கல்வித் திணைக்களம் வேலணை), செல்வகுமார் (லிகிதர் சுன்னாகம் MPCS), சுமதி (முகாமைத்துவ உதவியாளர் மாநகரசபை யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2011) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சிறுப்பிட்டியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கிந்துசிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.
0778009634 (சி-2707) -குடும்பத்தினர்

# நியாயமாக தேர்தல் நடைபெறாவிட்டால் வாக்குகள் செல்லுபடியற்றதாக்கப்படும்

## தேர்தல் ஆணையாளர் திட்டவட்டம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற தேர்தலின் போது கலவரம் ஏற்படுத்தி சுதந்திரமும், நியாயமானதுமான தேர்தலை நடத்த இடமளிக்கப்படாத அனைத்து வாக்களிப்பு நிலையங்களிலும் அளிக்கப்படும் வாக்குகள் செல்லுபடியற்றதாக்கப்படும் என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க எச்சரித்துள்ளார்.

அத்துடன் இவ்வாறு வாக்களிப்பு நிலையம் ஒன்றில் அளிக்கப்படும் வாக்குகள் செல்லுபடியற்றது என ஆக்கப்பட்டால் அதனுடன் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றத்தின் இறுதி முடிபுகள் வெளியிடப்படமாட்டாது எனவும் தயானந்த திஸாநாயக்க எச்சரித்துள்ளார்.

அவர் இவ்விடயம்குறித்து தொடர்ந்து கூறுகையில்,

வாக்களிப்பு நிலையம் ஒன்றுக்குள் அத்துமீறி நுழைந்து அங்குள்ள தேர்தல் அதிகாரிகளை விரட்டியடித்தல், காலை 7 மணிக்கு வாக்களிப்பை ஆரம்பிக்க முடியாமற் செய்தல், மாலை 4 மணிக்கு வாக்களிப்பை முடிபுக்கு கொண்டுவரமுடியாமற் செய்தல், வாக்காளர்களை அச்சுறுத்தல் ஆகியவை நியாயமான தேர்தலை நடத்த இடமளிக்கப்படாத நடவடிக்கைகளாக கணிக்கப்படும் என்றும் தெரிவித்தார். (ந-5)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியர்
திரு. விஸ்வலிங்கம் பாலகுமார் அவர்களின்
அன்புத் தந்தையார்

**செல்லையா விஸ்வலிங்கம்**




அவர்களின் மறைவால் ஆழ்ந்த துயரமடைகிறோம். அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ சித்திவிநாயகர் மகாவித்தியாலய
நலன்புரிச் சங்கம் புங்குடுதீவு

(சி-2708)

# மரண அறிவித்தல்

## செல்வி மனோகரன் கலைவாணி



கைதடி நுணாவில் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் வீதி உடுவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட மனோகரன் கலைவாணி கடந்த சனிக்கிழமை (12.03.2011) அகால மரணமடைந்தார்.

அன்னார் மனோகரன் மனோரதி (ஆசிரியை) தம்பதிகளின் பாசமிகு மகளும் இராமசாமி செல்லம்மா மற்றும் மயில்வாகனம் தையல்நாயகி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் லலித்கரன் (சுவிஸ்), வனஜா (லண்டன்), ஆகியோரின் பாசமிகு சகோதரியும் தனலக்சுமி (இந்தியா) கமலலக்சுமி (கனடா), குகதேவி, குணலக்சுமி (இந்தியா), அன்னலக்சுமி ஆகியோரின் அன்பு மருமகளும் மனோகரிதேவி, மனோராஜ் (பிரான்ஸ்), மனோராணி (பிரான்ஸ்), மனோரஞ்சனா (பிரான்ஸ்), மனோரஞ்சினி ஆகியோரின் பெறாமகளும் சீதன் (பிரான்ஸ்), கமலகுமாரன் (கனடா), செல்வகுமார் (கனடா) அகிலகுமார் (கனடா) கோகிலகுமாரி (பிரான்ஸ்), கஜலக்சுமி, இன்பசீதன் (லண்டன்), இன்பவதனி, பகீரதி (லண்டன்), வாசுகி (கொலண்ட்), ரஜீபன் (லண்டன்), சதீஸ்குமார் (கனடா), துஷாந்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் பவளவதனி (பிரான்ஸ்), சீலன் (பிரான்ஸ்) ஜெயவதனி (கனடா), மதிவதனி (லண்டன்), அனுசியா (பிரான்ஸ்), அமலன் (பிரான்ஸ்), ஆதவன் (பிரான்ஸ்), காஞ்சனா (பிரான்ஸ்), ராஜ்குமார் (பிரான்ஸ்), தமயந்தி (பிரான்ஸ்), ஆனந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2011) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மாலை 2 மணியளவில் பூதவுடல் நல்லடக்கத்திற்காக கைதடி நுணாவில் குச்சுப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி நுணாவில் வீதி,
சாவகச்சேரி.
021 7211508

(4051)

தகவல்
இ.மனோகரன் (தந்தை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலிறுதிக்குள் தென்னாபிரிக்கா அயர்லாந்து அணி பரிதாபம்

(கொல்கத்தா)

அயர்லாந்து அணிக்கு எதிரான லீக் போட்டியில் தென்னாபிரிக்க அணி 131 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதன் மூலம் தென்னாபிரிக்கா 08 புள்ளிகளுடன் பி பிரிவிலிருந்து முதல் அணியாக காலிறுதிக்கு முன்னேறியது.

இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் பத்தாவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது.

இதில் கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற 34-வது லீக் போட்டியில் பி பிரிவைச் சேர்ந்த தென்னாபிரிக்க-அயர்லாந்து அணிகள் மோதின.

இப் போட்டியில் தென்னாபிரிக்க அணியின் நம்பிக்கை நட்சத்திரம் ஏ.பி.டி. வில்லியர்ஸுக்கு ஓய்வு வழங்கப்பட்டு இங்ராம் அணியில் சேர்க்கப்பட்டார்.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அயர்லாந்து அணித் தலைவர் போர்ட்டர் பீல்ட் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு அம்லா- ஸிமித் ஜோடி ஆரம்பம் வழங்கியது.

இதில் தலா ஒரு பவுண்டரி, சிக்ஸர் அடித்த அம்லா 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து வான்வைக் களமிறங்க மறுமுனையில் அணித்தலைவர் ஆறு ஓட்டங்களுடன் ரன்-அவுட் முறையில் ஆட்டமிழக்க தென்னாபிரிக்க அணி 09.4 ஓவர்களில் 52 ஓட்டங்களை எடுத்து 02 விக்கெட்டுக்களையிழந்தது.

தொடர்ந்து வந்த கலிஸ் நிதானமாக ஆடி ஆறுதலளித்தார்.

இதில் வான்வைக் 41 பந்துகளில் (07 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 42 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.


அடுத்துக் களமிறங்கிய டுமினி சிறப்பாக ஆட மறுமுனையில் ஜக் கலிஸ் 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

தொடர்ந்து வந்த டு பிளிசஸ் 11 ஓட்டங்களுடன் வெளியேற தென்னாபிரிக்க அணி 26.3 ஓவர்களில் 117 ஓட்டங்களை எடுத்து 05 விக்கெட்டுக்களையிழந்து தத்தளித்தது.

இந்நிலையில் ஆறாவது விக்கெட்டுக்காக டுமினியுடன் இணைந்த இங்ராம் சிறப்பான ஆட்டத்தை வழங்கி நம்பிக்கை அளித்தார்.

இதில் போல் டுமினி 67 பந்துகளில் அரைச்சதம் பெற தென்னாபிரிக்க அணி 39.1 ஓவர்களில் 200 ஓட்டங்களைத் தாண்டியது.

இந்த ஜோடி ஆறாவது விக்கெட்டுக்காக 13.1 ஓவர்களில் 87 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்த போது இங்ராம் 43 பந்துகளில் (07 பவுண்டரிகள் உட்பட) 46 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.



அடுத்து போத்தா களமிறங்க மறுமுனையில் போல் டுமினி 103 பந்துகளில் (06 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 99 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்து சதம் பெறும் வாய்ப்பை நழுவவிட்டார்.

இந்நிலையில் தென்னாபிரிக்க அணி 50 ஓவர்கள் நிறைவில் 07 விக்கெட்டுக்களையிழந்து 272 ஓட்டங்களை எடுத்தது.

இதில் போத்தா 21 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தார்.

பந்துவீச்சில் ரன்கின், ஜோன்ஸ்ரன், மோனி, டோக்ரல், ஸ்ரிர்லிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 273 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணிக்கு, ஆரம்பத்திலேயே மோர்கல் மிரட்டினார்.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் போர்ட்டர் பீல்ட் 06, ஸ்ரிர்லிங் 10 ஓட்டங்களுடன் மோர்கலின் பந்தில் ஆட்டமிழந்தனர்.

அடுத்துவந்த நெய்ல் ஓ பிரைன் 10, ஜொய்ஸ் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அயர்லாந்து அணி 11.5 ஓவர்களில் 51 ஓட்டங்களை எடுத்து 04 விக்கெட்டுக்களையிழந்து தடுமாறியது.

இந்நிலையில் இணைந்த வில்சன்- கெவின் ஓ பிரைன் ஜோடி நிதானமாக ஆடியது. இந்த ஜோடி 05-வது விக்கெட்டுக்காக 41 ஓட்டங்களைச் சேர்த்தபோது கெவின் ஓ பிரைன் 19 ஓட்டங்களுடன் பீற்றர்சன் சுழலில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து அதே ஓவரில் வில்சன் 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பின் வரிசையில் குஷாக் 07, ஜோன்ஸ்ரன் 12, மோனி 14, டொக்ரல் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அயர்லாந்து அணி 33.2 ஓவர்களில் 141 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதன் மூலம் 131 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி தொடரில் 08 புள்ளிகளுடன் முதல் அணியாக காலிறுதிக்கு முன்னேறியது.

பந்துவீச்சில் மோர்னி மோர்கல், றெபின் பீற்றர்சன் ஆகியோர் தலா 03 விக்கெட்டுக்களையும் கலிஸ் 02 விக்கெட்டுக்களையும் போத்தா, டுமினி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டியில் தென்னாபிரிக்க அணியின் வெற்றிநாயகன் போல் டுமினி ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இதேவேளை இப் போட்டியில் தோல்வியடைந்ததன் மூலம் அயர்லாந்து அணி காலிறுதி வாய்ப்பை இழந்தது.




இந்திய- தென்னாபிரிக்க அணிகள் மோதிய உலகக் கிண்ணப் போட்டியில் தென்னாபிரிக்க அணியின் வெற்றிக்கு கடைசி ஓவரில் 13 ஓட்டங்கள் தேவைப்பட்டது. அப்போது பந்துவிசிய ஆஷிஸ் நெகரா 4 பந்தில் 16 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து இந்தியாவின் தோல்விக்கு காரணமானார்.

இந்நிரைலயில் நெகரா குறித்து பல டுவிட்டர், பேஸ்புக் போன்ற இணையத் தளங்களிலும் பலவிதமான எதிர்ப்புக் கருத்துக்கள் வெளியாகிவருகின்றன. அதில் நகைச்சுவையுடன் கூடிய சில கருத்துக்கள்.

⅄ ஒவ்வொரு வெற்றிகரமான துடுப்பாட்ட வீரர்களுக்கும் பின்னால் பாகிஸ்தான் வீரர் விக்கெட் காப்பாளர் கம்ரான் அக்மல் இருப்பார். ஆனால் துடுப்பாட்ட வீரர்களின் முன்னால் ஆஷிஸ் நெகரா இருப்பார். ஏனென்றால் அவர் சொதப்பலான பந்துவீச்சு செய்வார்.

⅄ நெகராவின் விருப்பப்பாடல்? வாகா வாகா, இம்முறை ஆபிரிக்காவுக்கு,

⅄ லெக்பிரேக் பந்துகளை சாவ்லா விடுகிறார். ஹார்ட் பிரேக் பந்துகளை (இதயத்தை நொறுக்கும்) நெகரா வீசுகிறார்.

## புள்ளிப் பட்டியல்

ICC Cricket World Cup 2011

### பிரிவு A

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| நியூசிலாந்து | 5 | 4 | 1 | 0 | 0 | 8 | +1.957 |
| பாகிஸ்தான் | 5 | 4 | 1 | 0 | 0 | 8 | +0.729 |
| இலங்கை | 5 | 3 | 1 | 0 | 1 | 7 | +2.705 |
| அவுஸ்திரேலியா | 4 | 3 | 0 | 0 | 1 | 7 | +1.645 |
| சிம்பாவே | 5 | 1 | 4 | 0 | 0 | 2 | -0.669 |
| கனடா | 5 | 1 | 4 | 0 | 0 | 2 | -2.046 |
| கென்யா | 5 | 0 | 5 | 0 | 0 | 0 | -3.005 |

### பிரிவு B

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| தென்னாபிரிக்கா | 5 | 4 | 1 | 0 | 0 | 8 | +1.606 |
| இந்தியா | 5 | 3 | 1 | 1 | 0 | 7 | +0.768 |
| மேற்கிந்தியத் தீவுகள் | 4 | 3 | 1 | 0 | 0 | 6 | +2.206 |
| பங்களாதேஷ் | 5 | 3 | 2 | 0 | 0 | 6 | -0.765 |
| இங்கிலாந்து | 5 | 2 | 2 | 1 | 0 | 5 | +0.013 |
| அயர்லாந்து | 5 | 1 | 4 | 0 | 0 | 2 | -0.881 |
| நெதர்லாந்து | 5 | 0 | 5 | 0 | 0 | 0 | -2.386 |







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் இளம் பூசகரின் சடலம் மீட்பு

(வரணி)

வரணி இயற்றாலை பகுதியிலுள்ள ஆலயம் ஒன்றிலிருந்து தூக்கில் தொங்கிய நிலையில் பூசகர் ஒருவரின் சடலத்தை கொடிகாமம் பொலிஸார் நேற்று மாலை மீட்டுள்ளனர்.

சாவகச்சேரியைச் சேர்ந்த இளம் பூசகரான குணாநந்த சர்மா ஹரிகரசர்மா (வயது 24) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பிரஸ்தாக நபர் இரண்டு நாட்களுக்கு முன்பு காணாமல் போனதாக உறவினர்களால் கொடிகாமம் பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்குச் சென்ற சாவகச்சேரி பதில் நீதவான் செ.கணபதிப்பிள்ளை, சடலத்தை மருத்துவ பரிசோதனைக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-5)

## வீதிகளில் சமாந்தரமாக பயணித்தவர்களுக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரவீதிகளில் சைக்கிள்களில் சமாந்தரமாக பயணித்த 20பேர் யாழ்ப்பாண பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

குறித்த வழக்கை விசாரித்த யாழ்.நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா குற்றவாளிகள் ஒவ்வொருவருக்கும் தலா 500 ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (ந-5)

## வவு.,மன்...

களுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

எனினும் யாழ்ப்பாணம் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ளூராட்சி தேர்தல் ஒத்திவைக்கப்பட்ட நிலையில் பாடசாலைகள் வழமைபோன்று நடைபெறும். இவ்வாறு வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ந-5)

## 15 வே...

மற்றும் இராணுவத்தினரும் மேலதிக பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் எனவும் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார். (ந-5)

## புலிகளுக்கு ஆதரவாக....

வேண்டும் என அவரது மனுவில் கேட்கப்பட்டிருந்தது.

சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி சந்துரு முன்னிலையில் விசாரணைக்கு வந்த வழக்கிலேயே நேற்றுத் தீர்ப்பு வெளியானது.

தடை செய்யப்பட்ட இயக்கத்துக்கு ஆதரவாக போராட்டம் நடத்துவதோ பிரசாரம் செய்வதோ குற்றமாகாது என வைகோ மீதான பொடா வழக்கில் உச்ச நீதிமன்றமே தீர்ப்பளித்துள்ளது.

எனவே விடுதலைப்புலிகள் மீது இந்தியாவில் விதிக்கப்பட்டுள்ள தடையை எதிர்த்து கையெழுத்து இயக்கம் நடத்துவது தவறு அல்ல என இத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகளுக்கு ஆதரவு கருத்துக்களை சொல்வது அரசியல் சட்டத்திற்கு எதிரான செயல்கள் அல்ல. இதனால் பொலிஸ் ஆணையாளரது உத்தரவு இரத்து செய்யப்படுகிறது. மனுதாரர் கையெழுத்து இயக்கம் நடத்த பொலிஸ் அனுமதிக்க வேண்டும் என இத்தீர்ப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## கொழும்பு விடுதிகளில்....

இவர்கள் கைது செய்யப் பட்டதாகவும் இவர்கள் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முயன்றதாக கிடைத்த தகவலையடுத்தே இக்கைது நடவடிக்கை இடம் பெற்றதாகவும் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பிருக்கிறதா அல்லது சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முயன்றார்களா என அறிவதற்காக விசாரித்து வருவதாகவும் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சந்தேக நபர்கள் பல்வேறு தேவைகளுக்காக கொழும்பிற்கு வந்ததாக சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான வழக்குரைஞர்கள் வி.எஸ்.நிரஞ்சன், மொஹமட் நஸார், ஏ.சி.எம்.இஸ்மாயில் ஆகியோர் நீதிமன்றில் கூறினார்.

ஒவ்வொரு பிரஜையும் எங்கும் வசிக்கலாம் என கூறப்பட்ட போதிலும் அப்பாவி மக்களை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்பதாலும் தமிழர்கள் என்பதாலும் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் சந்தேக நபர்களின் வழக்கறிஞர்கள் கூறினர்.

பத்துவயதுக்குக் கீழ்பட்டவர்கள் எப்படி எல்.ரி.ரி. நடவடிக்கையில் தொடர்பு பட்டிருக்க முடியும் எனவும் அவர்கள் கேள்வி எழுப்பினர்.

அதன்பின் சிறார்கள் நால்வரை விடுதலை செய்த நீதவான் ஏனையோரை மார்ச் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (ந-5)

## குற்றச்சாட்டுத் தொடர்பில்....

கள் மீது இலங்கைக் கடற் படையினர் தாக்குதல் நடத்துவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் கிடையாது.

இந்திய வெளிவிவகார செயலாளர் கடந்த ஜனவரி மாதம் இலங்கைக்கு விஜயம் செய்ததன் பின்னர் வெளியிட்ட கூட்டு அறிக்கையில் மீனவர் பிரச்சினை குறித்து தெளிவாக விளக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் மிக நெருக்கமான உறவு காணப்படுவதாக குறிப்பிட்ட அவர் சனல் 4 வீடியோ காட்சிகளை நியாயப்படுத்த மனித உரிமை கண்காணிப்பகம் முயற்சித்து வருவதாகவும் தெரிவித்தார். (ந-5)

## நாடுகடந்த தமிழீழ அரசால்....

ஸ்தானிகராலயத்துக்கு நேற்று சென்ற விசுவநாதன் உருத்திரகுமாரன் யப்பானிய பிரதமருக்கு கிடைக்கும் வகையில் மனு வொன்றை கையளித்துள்ளார்.

யப்பானில் ஏற்பட்டுள்ள நிலநடுக்கம் மற்றும் ஆழிப்பேரலை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள யப்பானிய மக்களின் துன்ப துயரங்களில் தமிழீழ மக்களும் பங்கெடுப்பதாகவும் இத்தகைய பெருந்துயரில் இருந்து யப்பானிய மக்கள் மீண்டும் எழுந்து வருவார்கள்எனதனக்குநம்பிக்கையிருப்பதாகவும்அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)




திருமண வாழ்த்துக்கள்

மங்கலகரமான இன்றைய நாளில்
இல்லறம் எனும் நல்லறம்தனில் இணையும்
ஜெயக்குமார் சந்திரிகா
தம்பதிகள் எல்லா வளமும் பெற்றுப் பல்லாண்டு
வாழ இறையாசி வேண்டி மங்கலகரமான
வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றோம்.

16.03.2011 வலம்புரிக் குடும்பம்


## புலிகளின் வான் தாக்கு....

தூதுவர் ரொபேட் ஓ பிளேக்கை அழைத்த பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, எதிர்காலத்தில் விடுதலைப்புலிகளின் வான் தாக்குதலுக்கு எதிராக எவ்வாறு வான் பாதுகாப்பை பலப்படுத்தலாம் என ஆராய்வதற்காக அமெரிக்க இராணுவக் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டும் என விருப்பம் தெரிவித்தாராம்.

கட்டுநாயக்க விமானப் படைத்தளத்தின் மீது தமிழீழ விடுதலைப் புலிகளின் விமானங்கள் தாக்குதல் நடத்திய சில நாட்களில் இச் சந்திப்பு இடம்பெற்றிருந்தது. இத்தாக்குதலால், இந்தியாவினால் கடனாக வழக்கப்பட்ட இரு எம்.ஐ. 17 ஹெலிகள் உட்பட பல ஹெலிகள் சேதமடைந்திருந்தன.

அவ்வேளையில் புலிகளின் விமானங்களை இந்திய ராடர்கள் கண்டறிய தவறியதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. எனினும் இலங்கை அரசாங்க அதிகாரிகள் அதை மறுத்திருந்தனர்.

இந் நிலையில், இலங்கையின் ராடர்கள் புலிகளின் வான் அச்சுறுத்தலை தடுக்க போதுமானவை அல்ல என அமெரிக்கத் தூதுவரிடம் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்ததாக 2007 ஏப்ரல் முதலாம் திகதி கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தினால் அனுப்பப்பட்ட இரகசிய கேபிள் குறிப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## நான்காவது அணு உலை....

குடியிருந்த மக்களை வெளியேறச் சொன்ன யப்பானிய அரசாங்கம், இப்போது 40 கிலோமீற்றர் வரையுள்ள பகுதிகளிலிருந்து மக்களை வெளியேற்றி வருகிறது. இது வரை மக்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு புகலிடம்தேடிப் புறப்பட்டுள்ளனர்.

டோக்கியோ வரை அணுக்கதிர் வீச்சு உணரப்பட்டுள்ளதாகவும் உடல்நலத்தைப் பாதிக்கும் அளவுக்கு இக் கதிர்வீச்சின் அளவு அபாயகட்டத்தை நெருங்கியுள்ளதாகவும் யப்பானின் அரசாங்கத்தின் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

அணுக்கதிர்வீச்சிலிருந்துதற்காலிகமாகப் பாதுகாத்துக்கொள்ளும் வழிமுறைகளும் மக்களுக்கு அறிவிக்கப்பட்டவண்ணம் உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (ந-5)


கல்விமாணி B.Ed [தேசிய கல்வி நிறுவகம்] தெரிவுப்பரீட்சை
[தமிழ்; ஆங்கிலம்] வழிகாட்டல் செயலமர்வு-2011

(பொது உளச்சார்பும் கல்விசார் பொது அறிவும்)

மேற்படி பரீட்சை 26.03.2011 அன்று நடைபெறவுள்ளது. அனேகரின் வேண்டுகோளுக்கிணங்கவும் எமது மண்ணிலிருந்து கூடுதலானோர் தெரிவாகவும் வழிகாட்டல் செயலமர்வு 19ஆம், 20ஆம் (சனி, ஞாயிறு) திகதிகளில் காலை 9.00 - 3.00 மணிவரை யா/இந்து மகளிர் கல்லூரியில் தேசிய ரீதியிலான நிபுணத்துவ வளவாளர்களால் மேற்கொள்ளப்படும் செயலமர்வில் பங்குகொள்ள விரும்புவோர் 0779360 607 என்ற T.P யில் பதிவுகளை இன்றும் நாளையும் மேற்கொள்ள முடியும். பதிவுசெய்யாதோர் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

பா.தனபாலன் (பணிப்பாளர்)
ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம்,
528 பலாலி வீதி, திருநெல்வேலி

(C-2700)



PRINCESS OF WALES NURSING HOME

132,Kokulam Kachcheri Nallur Road,Jaffna, Srilanka.
Phone- +94 (21)2226179, +94 (21)2226180
Email: princesshosp@gmail.com

- ★ பொது சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர்
- ★ இருதய நோய் சிகிச்சை வைத்திய நிபுணர்
- ★ மகப்பேற்று சிகிச்சை வைத்திய நிபுணர்
- ★ நீரிழிவு [ Diabetes ] சிகிச்சை வைத்திய நிபுணர்
- ★ கண் சிகிச்சை வைத்திய நிபுணர்
- ★ முறிவு , நெரிவு சிகிச்சை வைத்திய நிபுணர்
- ★ குழந்தை சிகிச்சை வைத்திய நிபுணர்

மேற்குறிப்பிட்ட வைத்திய நிபுணர்கள் யாவரும் எமது வைத்தியசாலைக்கு நோயாளர்களைப் பார்வையிட வருகை தருகிறார்கள் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

☆ மெடிக்கல் கோடினேற்றர் (Medical Cordinator)
☆ அனுபவம் வாய்ந்த தாதிமார்கள் (இரவு+பகல் சேவை)

உடனடியாக நேரில் சமுகம் தரவும்

(C-2706)



AUTO CAR HIRE

வெள்ளை நிறமுடைய திருமண வைபவங்களிற்கு ஏற்ற கார் நாள் வாடகைக்குபெற்றுக்கொள்ளலாம்.

(3979)

தொடர்புகளுக்கு: 0215673555 /666


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.03.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org